விலை: 30.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 013 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 17 சனிக்கிழமை (01.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

VIJEAY Complex
www.vijeaycomplex.com

இனிய புதுவருட வாழ்த்துக்கள்
உங்கள் அனைத்து மங்கல நிகழ்வுகளையும் கொண்டாடி
மகிழ்ந்திட எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
0033687713427
021 221 2899/077 723 0104/077 449 6386
No.199, Chundikuli - Columbuthurai Road, Jaffna.
(9219)



அனைவருக்கும் இனிய
ஆங்கில புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

## பாரத பிரதமருக்கான ஆவணத்தில் கையெழுத்திட முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

### இரா.சம்பந்தனுடனான நேற்றைய கூட்டத்தில் இணக்கம்

- தமிழ் பேசும் சமூகங்களை குழப்புவதற்கு பலர் முயற்சிப்பதாக ஹக்கீம் தெரிவிப்பு.
- சில தினங்களில் மீண்டும் ஒன்றுகூடி ஆவணங்கள் தொடர்பில் ஆராய முடிவு.

(23ஆம் பக்கம் பார்க்க)



உலகை அச்சுறுத்தும்

## 41 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் நாட்டில் அடையாளம்

### உயிரியல் நிறுவனப் பணிப்பாளர் சந்திம ஜீவந்தர

*(கொழும்பு)*

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒமிக்ரோன் திரிபு வைரஸ் தொற்றுடன் நாட்டில் மேலும் 41 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலையின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் சந்திம ஜீவந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

இறக்குமதி செய்யப்படும்

## வெங்காயம், உருளைக்கிழங்கின் இறக்குமதி வரி குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்திற்கான விசேட பொருட்கள் வரி கிலோ ஒன்றுக்கு 30 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த வரிச்சலுகை இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

சந்தையில் உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் விலை 23

திருமலை எண்ணெய் குதங்கள்

## மேலும் 50 வருடங்களுக்கு இந்தியாவுக்கு குத்தகை

(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய் களஞ்சியசாலையில் உள்ள 99 குதங்களில் தற்போது லங்கா ஐஓசி நிறுவனம் பயன்படுத்தும் 14 குதங்களை 50 வருட காலத்திற்கு அவர்களுக்கே குத்தகைக்கு வழங்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 23

ஜனவரி 10ஆம் திகதி

## மீண்டும் இந்தியா செல்கிறார் பசில்

(யாழ்ப்பாணம்)

விடுமுறைக்காக அமெரிக்கா சென்றுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ அடுத்த வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி முதல் 12ஆம் 23



## நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என அச்சம் வேண்டாம்

### விவசாய பணிப்பாளர் அஜந்த டி சில்வா

(கொழும்பு)

நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என அச்சம் கொள்ள தேவையில்லையென விவசாய பணிப்பாளர் நாயகம் கலாநிதி.அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான உணவாக சோறு உட்கொள்ளப் படுவதால், அடுத்த வரு 23

வத்தளையில்

## எரிவாயு கசிவால் வீடொன்றில் தீ பரவல்

(கொழும்பு)

வத்தளை - 23

சீரற்ற காலநிலையால்

## யாழில் 14 குடும்பங்களை சேர்ந்த 37 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம்மாவட்டத்தில் 14 குடும்பங்களை சேர்ந்த 37 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் 23

தெல்லிப்பழையில்

## மதுபோதையில் இருந்த பொலிஸார் பணி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று 23

பசுமை விவசாய கொள்கையை

## சவால்களுக்கு மத்தியில் நடைமுறைப்படுத்துவேன்

### விவசாய அமைச்சர் மகிந்தானந்த

(கொழும்பு)

அனைத்து சவால்களுக்கும் மத்தியிலும்பசுமை விவசாயக் கொள்கையை 23

## மக்கள் பட்டினியால் வாடுவதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது

### வர்த்தக அமைச்சர் பந்துல



(கொழும்பு)

நாட்டு மக்கள் பட்டினியால் வாடுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஹம்பேகமுவ சதொசவை திறந்து வைத்த 23

## 15 ஆயிரத்தை அண்மிக்கும் கொரோனா மரணம்

### நாட்டில் மேலும் 17 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 15 ஆயிரத்தை அண்மித்துள்ளது.

நாட்டில் மேலும் 17 பேர் கோவிட்டால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அறிவித்தல்

கொக்குவில் கஜன் மண்டபத்திற்கு அருகாமையில் இயங்கிவந்த ஆட்டிறைச்சிக் கடையின் உரிமையாளர் நல்லையா உதயகுமார் (பெரியதம்பி) 2022.01.01 அன்று கொக்குவில் சந்தைக்கு இடமாறவுள்ளார் என்பதனை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றார்.

(9320)



தொடர்புகளுக்கு
**077 085 6479**

# எல்ல நீர்வீழ்ச்சியில் காணாமல்போன யாழ்ப்பாண சிறுமிகள்

## ஒருவரது சடலம் மீட்பு

ஹங்வெல்ல - அவிசாவளை, புவக்பிட்டிய தும்மோதர குமாரி எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்று காணாமல்போன யாழ்ப்பாண சிறுமிகள் மூவரில் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் உறவினர் வீட்டுக்கு வந்த இவர்கள் நேற்று முன்தினம் உறவினர்களுடன் குமாரி எல்ல நீர்வீழ்ச்சிக்கு நீராட சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை பெய்த கடும் மழையினால் திடீரென நீர்வீழ்ச்சியின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக நீராடிக் கொண்டிருந்த ஆறு நபர்கள் நீரில் அடித் துச் செல்லப்பட்டுள்ளனர்.

மூன்று நபர்களை பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளனர். ஒரு யுவதியும் இரண்டு சிறுமிகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ம)

## காணிகள், கடைகள், வீடுகள் வாங்க விற்க

- யாழ். நகரப் பகுதியில் 7 பரப்புக் காணி மேல்மாடி கட்டடத்துடன் (யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக - கடந்த வருடம் 1 பரப்பு 8 கோடி என வங்கியால் பெறுமதியிடப்பட்டது.)
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மெயின் றோட்டில் 1 1/2 பரப்பு மற்றும் 5 1/2 பரப்பு. 3 1/2 பரப்பு புதிய வீட்டுடன்.
- யாழ். திருநெல்வேலி சந்தியில் 2 கடைகள்.
- பலாலி வீதி கந்தர்மடத்தில் 1 1/2 பரப்பு காணி.
- K.K.S வீதியில் 1 1/2 பரப்பு காணியுடன் கடை.
- நல்லூர் கோவில் வடக்கு வீதி, சங்கிலியன் வீதியில் 2 1/4 பரப்பு.
- யாழ். கைதடி A9 வீதியில் 14 பரப்புக் காணி.
- யாழ். சத்திரத்துச் சந்தி கொட்டடி வீதியில் 3 பரப்பு காணி.
- ஓமந்தையில் 14 ஏக்கர் தென்னந்தோட்டம்.
- ஓமந்தை வண்ணாங்குளத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் கல்லுடைக்கும் கிரேசர்/ வீடு.
- யாழ். வேலணையில் 10 பரப்பு புகையிலைத் தோட்டக் காணி.
- யாழ். நல்லூர் கோவில் அருகாமையில் 2 1/2 பரப்பு.
- வவுனியா நகரப் பகுதியில் மிகப் பிரபல்யமான இடத்தில் 6 பரப்புக் காணி.
- A9 மாங்குளத்தில் 10 ஏக்கர் தோட்டத்துடன் கூடிய 2 வீடுகள்.
- யாழ். இராச பாதை வீதியில் 40 பரப்பு காணி (பிரித்து வழங்க முடியும்.)
- வவுனியா A9 வீதியில் (சாந்தசோலை) 30 பரப்புக்காணி
- வவுனியா தோணிக்கல் பகுதியில் 6 பரப்பு காணியுடன் வீடு.
- யாழ். நகர் IBC கட்டடத்திற்கு அருகாமையில் உள்ள வீதியில் 2 பரப்பு காணி

**உடன் விற்பனைக்கு உண்டு.**

(9351)

**வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களில் காணிகள் விற்க/ வாங்க தொடர்பு கொள்ளவும்.**

தொடர்பு
**VIMB, வங்களாவடி, வேலணை.**
**077 522 1132**
**077 493 4336**
**076 281 2188**


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**


## மணிவிழா வாழ்த்துக்கள்




யா/ வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெற்று மணிவிழாக் காணும்

திரு.
**J.A தவநாயகம்**

அவர்கள் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ பெரும் மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

(9341)

**கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள். கோப்பாய்க் கல்விக் கோட்டம்**

## கண்ணீர் அஞ்சலி

யா / சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் விஞ்ஞானபாட ஆசிரியர்
திரு. நா. கீதபொன்கலன் அவர்களின் அன்புத் தந்தை

**திரு. சின்னையா நாகமணி**



அவர்கள் நேற்று (31.12.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிராரத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(9350)

**பாடசாலைச் சங்கம்**
**யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 | 02 |
| 03 | 12 |
| 1948 | 2021 |



அமரர்
**திருமதி தர்மலிங்கம் சரஸ்வதி**

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப்பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் தாயே!

" சரஸ்வதி வாசம் "
வட்டு. கிழக்கு, சித்தன்கேணி.

(9279)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

**சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல்** (வேல் மாஸ்டர்)

( ஓய்வுபெற்ற அதிபர் – புத்தூர் )



யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல் அவர்கள் கடந்த 28.12.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கங்காதேவியின் அன்புக் கணவரும் செந்தூரா, ஞானேந்திரா, தனலோஜினி, குகசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரத்தினராசாத்தி, நவரத்தினவேல், நவரத்தினராணி, நவராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற விவேகானந்தர் மற்றும் பாஸ்கரதேவி, விபுலானந்தன், குமாரகுலசிங்கம், சிவராஜகோபால், ஜெயராணி, ஜெயந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 29.12.2021 (புதன்கிழமை) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புத்தூர் வடக்கு கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனக் கிரியை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் [illegible]ளவும்.

(C-3391)

புத்தூர் கிழக்கு, புத்தூர்.
077 176 6210
தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அத்துமீறுகின்ற இந்திய மீனவர்களை கைது செய்

## இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

# கொட்டும் மழையிலும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக நேற்று போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. வலி.வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கங்களின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மயிலிட்டி துறைமுகத்தில் ஒன்றுகூடிய மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துமீறுகின்ற இந்திய மீனவர்களை கைது செய், கைது செய்கின்ற படகுகளை அரசுடைமையாக்கு போன்ற கோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர். கொட்டும் மழையிலும் கடற்றொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-33-18-104)



# அத்தியாவசியப் பொருட்களின் விலையை

# வர்த்தகர்கள் தீர்மானித்தால் அரசு எதற்கு

## இவர்களுக்கு எதிராக மக்கள் புரட்சி வெடிக்கும்

## நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு

(கொழும்பு)

**காலையில் எந்தப் பொருளின் விலை மீண்டும் அதிகரிக்கப்படுமோ என்ற அச்சத்தில் நடுத்தர மக்கள் இரவு நித்திரைக்குச் செல்கிறார்கள். வெகுவிரைவில் பொதுமக்கள் வீதியில் இறங்கி அரசுக்கு எதிராகப் போராடுவார்கள் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.**

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அத்தியாவசியப் பொருட்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானிப்பார்களாயின் அரசு எதற்கு? அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், உணவுத் தட்டுப்பாடு குறித்து வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிடும் கருத்துக்கள் வெறுக் கத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

சதொச விற்பனை நிலையங்களிலும் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளும், பேருந்து கட்டணங்களும் அதி கரிக்கப்பட்டன.

தற்போது இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பால்மா உற்பத்தியிலான ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானிப்பார்களாயின் வர்த்தகத்துறை அமைச்சு, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய தரப்பினர் எதற்கு?

காலையில் எப்பொருளின் விலை அதிகரிக்கப்படும்என்ற அச்சத்தில் நடுத்தர மக்கள் இரவு நித்திரைக்குச் செல்கின்றார்கள்.

அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள தற்போது வரிசையில் காத்திருக்கும் மக்கள் வெகுவிரைவில் அரசுக்கு எதிராக வீதியில் இறங்குவார்கள். நுகர்வோர் அதிகார சபை செயற்பாட்டில் உள்ளதா என்ற சந்தேகம் கூட எழுந்துள்ளது" - என அவர் தெரிவித்தார். (நி-5)

## அரசாங்கத்தை கவிழ்க்க மூன்றாண்டுகள் காத்திருக்க தேவையில்லை

### மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் உரிமைகள், தேவைகள் என்பன சகல விதத்திலும் புறக்கணிக்கப்படுகின்ற இன்றைய சூழலில் மக்கள் அனைத்தையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கப்போவதில்லை.

மக்களுக்கு அரசாங்கத்தை மாற்றும் அதிகாரம் உள்ளது. அதற்காக மூன்று ஆண்டுகள் வேடிக்கை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே வெகு விரைவில் அரசாங்கத்தை விரட்டியடிப்பார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் செயற்பாடுகள் மற்றும் ஆட்சி மாற்றத்திற்கான நோக்கங்கள் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தை வெளிப்படுத்தும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில், அத்தியாவசிய பொருட்கள், மருந்துகள் என எதுவுமே இல்லாது போகும் வேளையில், சகல பொருட்களையும் பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையில் நிற்க வேண்டும் என்ற நிலை உருவாகி உள்ளது எனவே மக்கள் மேலும் மூன்று ஆண்டுகள் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள்.

மக்களுக்கு அரசாங்கத்தை மாற்றும் அதிகாரம் உள்ளது. எனவே வெகு விரைவில் அரசாங்கத்தை விரட்டியடிப்பார்கள்.

ஆனால் இது கலவரமாக அமையாது, ஜனநாயக ரீதியில் மாற்றத்தை உருவாக்க முடியும். குறிப்பிட்ட சிலர் வீதியில் இறங்கினால் அரசாங்கத்தினால் அடக்குமுறையை கையாள முடியும். ஆனால் மக்கள் அலை வீதிக்கு இறங்கினால் அவர்களால் அடக்குமுறையை கையாள முடியாது.

இவ்வாறான நெருக்கடிகளில் மக்கள் பொறுத்துக் கொண்டு இருக்கப்போவதில்லை. எனவே ஜனநாயக ரீதியில் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## ஜனவரியில் அமைச்சரவை மாற்றம்

### அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அமைச்சரவை 2022 ஜனவரி மாதம் மறுசீரமைக்கப்படக்கூடும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார் என தெற்கு ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன. அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் இணக்கம் வெளியிட்டுள்ளார். அந்த மாற்றத்தை ஜனவரி 8 ஆம் திகதி நிகழ்த்துவதா, அல்லது 18 ஆம் திகதி நிகழ்த்துவதா? என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

முக்கியமான சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், புதிய சிலருக்கும் வாய்ப்பளிக்கப் படவுள்ளது என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடு / கட்டடம் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறை மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரியவீடு / கட்டடம் தேவைப்படுகின்றது. கைதடி சித்தமருத்துவத் துறையை அண்மித்த பகுதிகளில் இலகுவாகச் சென்றடையக்கூடிய வகையில் உள்ளவாறு வீடு / கட்டடம் தேவைப்படுகின்றது.

| இல. | விபரம் | தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 01. | அறைகளின் இடவசதி | 20 - 30 மாணவர்களாவது தங்கக்கூடிய வாறு அறைகள் இருத்தல் வேண்டும். |
| 02. | குளியல் அறைகள் | 03 - 08 |
| 03. | மலசலகூடங்கள் | 03 - 05 |
| 04. | சைக்கிள், மோட்டார் சைக்கிள் தரிப்பிட வசதி | மேற்குறித்த வகையில் போதுமான அளவு |
| 05. | தண்ணீர் வசதி | மேற்குறித்த வகையில் போதுமான அளவு |
| 06. | மின்சாரம் | தடங்கலின்றிய வழங்கல் |
| 07. | பொது இடம் | மாணவர்கள் கல்வி கற்பதற்கானது |

வீடு / கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தை உதவிப் பதிவாளர் சித்தமருத்துவ அலகு அல்லது பொது நிர்வாகக் கிளையில் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிரதிப் பதிவாளர்/ பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 14.01.2022 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மாணவர்களின் உபயோகத்துக்கான வீடு/ கட்டடம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பல்கலைக்கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கங்கள் :**

பிரதிப் பதிவாளர் / பொது நிர்வாகம் - **021 222 6517, 076 605 9563**

உதவிப் பதிவாளர் / சித்தமருத்துவ அலகு-**021 223 2629, 077 224 9935**

**பதிவாளர்**

(C-3389)


# இந்திய அணி வெற்றி




தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 113 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில், இந்தியக் கிரிக் கெட் அணி முன்னிலை பெற்றுள்ளது.

சென்சூரியனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 327 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி, 197 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனையடுத்து 130 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 174 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால், தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கு 305 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனையடுத்து 305 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 191 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், இந்தியக் கிரிக் கெட் அணி 113 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இந்தியக் கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கே.எல். ராகுல் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, நாளை மறுதினம் 3 ஆம் திகதி ஜோகனஸ்பர்க்கில் நடைபெறவுள்ளது. (4-6)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



திருமதி

## மங்கையற்கரசி சற்குருநாதன்

யாழ். திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் திர்ஷிகா கலைக்கூடத்தின் அதிபர் சிற்பக் கலாவாரிதி நடராஜா சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார் அவர்களின் பிரிய பத்தினியுமான திருமதி மங்கையற்கரசி சற்குருநாதன் (மங்கை) அவர்கள் கடந்த 29.12.2021 (புதன்கிழமை) அன்று அதிகாலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் வர்ணக்கலைவேந்தன், காலஞ்சென்ற கனகராஜா மற்றும் கேதீஸ்வரன், சரோஜினிதேவி, ஜெயசீலன் (ஓவியர்), மகாலட்சுமி, மங்களேஸ்வரி, நித்தியானந்தன் (சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் - மன்னார்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் புஸ்பராணி, தெய்வநாயகி, பாலேந்திரன், சூரியகுமார், சத்தியஸ்ரீ, அருட்செல்வி, புவனேஸ்வரி (ஆனந்தி), சுந்தரமூர்த்தி (மூர்த்தி), சந்திராதேவி (கிளி), சுப்பிரமணியம், காலஞ்சென்ற சண்முகராஜா, செந்தில்வதனி ஆகியோரின் அன்புமிகு மைத்துனியும் திர்ஷிகா, சரண்ஜா (பின்லாந்து), சிற்பக்கலைஞர்களான வர்க்கீசன், விதுர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கருண்ராஜ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), நிஷாந்தன் (பின்லாந்து) ஆகியோரின். பாசமிகு மாமியாரும் அஸ்வின், அட்ஷயன், அஸ்மிதா, துவிஸ்தா, திகழ்யன் (பின்லாந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 469 4329, 077 801 0336, 077 808 9782, 077 844 3506, 00358466880270**

(9343)

தகவல் :-

நடராஜா சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார் (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்.

அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்துள்ள புதியஆண்டில் சவால்களை வெற்றி கொள்வோம்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

**(கொழும்பு)**

**மலர்ந்துள்ள புத்தாண்டு எதிர்காலத்தைப் புதிய உத்வேகத்துடனும் நம்பிக்கை மற்றும் உறுதியுடனும் பார்க்கத் தூண்டியிருக்கிறது. அதனால் 2022 ஆம் ஆண்டை மிகுந்த ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் வரவேற்போம் என புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



நாட்டின் மீதும் எமது சமூகத்தின் மீதும் கடந்த ஆண்டு ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். எதிர்காலப் புத்தெழுச்சிக்காக நாம் உறுதியுடன் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

இந்தச் சவால்களைத் தொடர்வதற்கும் வெற்றி கொள்வதற்கும், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

தொற்றுப் பரவல் காரணமாக முடங்கியுள்ள பொருளாதாரம், இயல்பு வாழ்க்கை என்பன இதன் மூலம் பாதுகாக்கப்படும். அதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை, புதிய பொது மைப்படுத்தலின் கீழ் செயற்படுத்த எம்மால் முடியும். தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலமே அவ்வாறான எழுச்சியை நோக்கிப் பயணிக்க முடியும். வெற்றி கொண்ட சவால்களைப் போன்றே, பெற்றுக்கொண்ட அனுபவங்களும் இப்புத்தாண்டில் நம்மை ஊக்குவிக்கும்.


உலகளாவிய தொற்றுப் பரவலானது, பொது மக்களின் அபிலாஷைகளை அடைவதற்கான முன்னேற்றத்தை மோசமாகப் பாதிக்கச் செய்துள்ளது. இவ்வாறான நிலைமையிலும் தேசிய பாதுகாப்பு மற்றும் சக வாழ்வு என்பன நிலைநாட்டப்பட்டுள்ளன. பல புதிய சீர்திருத்தங்கள் உருவாக்கப்படுகின்றன. செயலற்றிருந்த அரச மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தவும் அவற்றைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு செல்லவும் தற்போதைய அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மலர்ந்துள்ள புத்தாண்டை, மக்களுக்கான "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்தை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணித்து, மாற்றத்துடன் கூடிய புத்தாண்டாக மாற்ற அணிதிரளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டு, உங்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் தைரியமிக்கதுமான புத்தாண்டாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இலங்கைக்கு இந்தியா கடன் கொடுக்க வேண்டும்

## -சுப்பிரமணியன் சுவாமி-



(கொழும்பு)

இலங்கைக்கு 10 பில்லியன் டொலர் கடன் களை இந்தியா வழங்க வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியும் இந்திய மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இதன்மூலம் சீனாவிற்கு ஒரு சகா கிடைப்பதை தடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் தனக்கு நீண்டகால சகா ஒருவர் தேவை என இந்தியா கருதினால் தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பத்து பில்லியன் அமெரிக்க டொலர் களை (ஒத்திவைக்கப்பட்ட வட்டி) கடனாக வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கம் பல வெளிவிவகார கொள்கைகளில் தோல்வியடைந்துள்ளது. இலங்கை இன்னொன்றாக இருக்க வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# மரண அறிவித்தல்

## திருமதி. இராசையா தவமணி



துன்னாலை தெற்கை பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கு, புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா தவமணி அவர்கள் 29.12.2021 அன்று காலமானார்.

அன்னார் இராசையாவின் பாசமிகு மனைவியும் ,பிறேமலதா, பிரபாகரன், பிரதீபன், தயாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாசன், துஷா யினி, லோஜினி ஆகி யோரின் பாசமிகு மாமியா ரும், சங்கவி, ஜெகதாரன் ஆகியோரின் பாச மிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.01.2022 திங்கட் கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**02.01.2022 அன்று நடைபெற இருந்த தகனக்கிரியை தவிர்க்க முடியாத காரணத்தினால் 03.01.2022ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.**

**குமாரசாமி வீதி,**
**புத்தூர் கிழக்கு, புத்தூர்.** (9329) **தகவல்: குடும்பத்தினர்**

# இராசிபலன்

**01.01.2022**
**மார்கழி 17, சனிக்கிழமை**
**சதுர்த்தசி பின்னிரவு 3.07 மணிவரை**

**கேட்டை முன்னிரவு 6.30 மணிவரை**
**சுபநேரம்-3.29-4.59 மணிவரை**
**இராகு காலம்- 9.29-10.59 மணிவரை**

**சந்திராஷ்டமம்- பரணி கார்த்திகை**
**எல்லாப்புகழும் இறைவனுக்கே**
**வளவன்**

மேஷம்: குடும்பத்தில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆராக்கியத்தில் கவனம் தேவை, யோசித்து செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.

ரிஷபம்: பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

மிதுனம்: அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், வியாபார விருத்தியுண்டு.

கடகம்: மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உறவினர் பகை மாறும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

சிம்மம்: உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு நன்மை தரும்.

கன்னி: உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

துலாம்: பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

விருச்சிகம்: முன்னேற்றம் கூடும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், உறவினர் பகை மாறும், கற்பனை மிகுதியான நாள்.

தனுசு: தேக நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு விலகும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

மகரம்: முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலாபகரமான நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

கும்பம்: என்றோ நடக்கலாம் என நினைத்த காரியம் இன்று நல்லவிதமாக அமையலாம், வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பீர்கள்.

மீனம்: மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தேக நலன் சீராகும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**நீ உன்னைச் சந்திக்கும் நேரம் தான் தியானம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத இறால் கூடுகளை அகற்ற நடவடிக்கை



(தருமபுரம்)

சுண்டிக்குளம், "களப்புக்கடல்" என்று அழைக்கப்படும் ஆனையிறவுக் கடல் நீரேரிப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப் பட்டுள்ள இறால் கூடுகளை நேரில் சென்று பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, அவற்றை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குறித்த இறால் கூடுகளினால் பருவமடையாத இறால்கள் பிடிக்கப்படுவதுடன், மீன் குஞ்சுகளும் அழிவடைகின்றன. இதனால், கடல் வளங்கள் பாதிக்கப்படுவதுடன், பொருளாதார இழப்பும் ஏற்படுகின்ற நிலையிலேயே அமைச்சரினால் குறித்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (4-5-316)



சுன்னாகம் வாழ்வகத்தின் தலைவரும் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளருமான ரவீந்திரனிற்கு பாராட்டு விழா கடந்த 28 ஆம் திகதி வாழ்வகத்தில் இடம்பெற்றது. இந்த வருடத்திற்கான யாழ்.விருது பெற்றுக்கொண்டதை கௌரவிக்கும் முகமாக இப் பாராட்டு விழா இடம்பெற்றது. (படம்:-கஜிந்தன்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை பன்னாலை வரத்தளம் கற்பக விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ம.மகேந்திர சர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-5)

# நூல்கள் வெளியீடும் பெரு மதிப்பளிப்பும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சைவத்திரு நெறிக்கழகத்தின் ஏற்பாட்டில் பெரிய சந்நியாசியார் சமாதியடைந்த 104 ஆம் ஆண்டு நிறைவையொட்டி இரு நூல்கள் வெளியீடும் பெரு மதிப்பளிப்பும் மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மஞ்சத்தடி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கெ.தவராசா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் பொறியியலாளர் வே.பிரேமகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (4-5)

# ‘ஆதாரம்’ நூல் வெளியீடு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் "ஆதாரம்" நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலயத்தின் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் வே.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் பா.செந்தில்நந்தன், சிறப்பு விருந்தினராக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன், யாழ்ப்பாணம் செலான் வங்கி முகாமையாளர் ம.குணேந்திரா ஆகியோர் கலந்து கொள்வர். (4-5-60)

# சூழலியல் மற்றும் விவசாய செயற்றிட்டம் தொடர்பில் செயலமர்வு



(குப்பிழான்)

நீர் முகாமைத்துவம், சூழலியல் மற்றும் விவசாயச் செயற்திட்டங்கள் தொடர்பான செயலமர்வு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி செயலமர்வில் நீர் முகாமைத்துவம், சூழலியல் மற்றும் விவசாயம் தொடர்பில் தற்போதுள்ள செயற்திட்டங்கள் மற்றும் மேலதிகமாக உள்ளீர்க்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் மற்றும் அச் செயற்றிட்டங்களில் தொழில்நுட்பத்தை எவ்வாறு இணைக்கலாம்? என்பது தொடர்பில் துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. (4-5-18)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வும், நினைவுப் பேருரையும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன், ரவிசாந்-கஜிந்தன்)

# இரத்ததான முகாமும் உலர் உணவு வழங்கலும்

(குப்பிழான்)

சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர்.நேசதுரை நிலக்சனின் பிறந்தநாள் ஞாபகார்த்தமாக அவரது நண்பர்களால் உருவாக்கப்பட்ட கன்று அறக்கொடை நிதியத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் நாளை 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-5-18)



செட்டிகுளத்தில் கலை கலாச்சார பாரம்பரிய பண்பாட்டு ஊர்வலமும், தெய்வீக கிராம நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பெரியகட்டு, கணேசபுரம், புதுக்குடியேற்ற திட்டப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. (படம்- வசந்தரூபன்)

# அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 11 நிகழ்வு ஜனவரி 2,3,4,5,6 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-5)

# நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலைஞர், முற்போக்கு எழுத்தாளர், ஊடகவியலாளர் வைரமுத்து திவ்விய ராஜனின்" இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால்தான் என்ன..." - ஓர் இதயத்தின் கதை - நூல் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

ஆர்வலர்கள் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இந் நிகழ்வில் கலந்துகொள்ள முடியும் என தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுள்ளனர். (4-5)

# புதிய நிர்வாக தெரிவு

(கரணவாய்)

நெல்லியடி பேருந்து தரிப்பிட முச்சக்கர வண்டி சாரதிகளின் புதிய நிர்வாகத் தெரிவு நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் மேற்பார்வையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக வீ.வின்சராசா, செயலாளராக க.கவியழகன், பொருளாளராக சி.புஸ்பராசா, உபதலைவராக ராசன் விஜிதரன், உப செயலாளராக சி.ஆர்த்திகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டு நம்மையும் சமூகத்தையும் பாதுகாப்போம்

## பிரதி சுகாதார பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

**டெல்டா வைரஸ் பரவலுடன் ஒமிக்ரோன் வைரஸும் பரவ ஆரம்பித்தால் நாட்டில் மிக மோசமான நிலையொன்று ஏற்படும். எனவே வைரஸ் தொற்றில் இருந்து விடுபட சகலரும் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் நோய் அறிகுறியுடன் அதிகளவான ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம் என பிரதி சுகாதார பணிப்பாளர் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

கொவிட் -19 வைரஸ் தொற்றுப் பரவல் குறித்த சுகாதார தரப்பின் அவதானிப்புகள் மற்றும் புதிய தரவுகள் குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒமிக்ரோன் வைரஸ் மிக வேகமாக உலக நாடுகளில் பரவிக் கொண்டுள்ளது. பல்வேறு நாடுகள் மீண்டும் முடக்க நிலையை அறிவித்துள்ளன.

உலக சுகாதார ஸ்தாபனமும் ஒமிக்ரோன் வைரஸ் குறித்த அச்சுறுத்தல் சமிக்ஞையையே கொடுத்துள்ளது.

இலங்கையிலும் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது சாதாரண விடயமல்ல.

ஏனைய நாடுகளை போன்று இலங்கையிலும் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் இருப்பதையே இது வெளிப்படுத்தியுள்ளது. ஆகவே மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

முதலாம், இரண்டாம் தடுப்பூசிகளை விரைவாக ஏற்றிக்கொண்டதன் காரணத்தினால் தான் எம்மால் இப்போது சற்று பாதுகாப்பான சூழலை உருவாக்கிக்கொள்ள முடிந்துள்ளது. இல்லையேல் தொடர்ந்தும் நாடு முடக்கத்தில் இருந்திருக்கும்.

ஆனால் இரண்டு தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டதற்காக இனிமேல் தடுப்பூசிகள் அவசியம் இல்லை என அர்த்தப்படாது.

ஏனென்றால் இந்த தடுப்பூசிகள் அனைத்துமே தற்காலிக பாதுகாப்பாக அமைந்துள்ளதே தவிர நிரந்தர தீர்வு அல்ல.

எனவே மக்கள் இப்போது பூஸ்டர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாது தடுப்பூசியைத் தவிர்த்துக் கொள்ளும் நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இது சமூகத்திற்கு பாதிப்பாகும்.



எனவே 30 வயதிற்கு மேற்பட்ட சகலரும் கண்டிப்பாக பூஸ்டர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வது ஆரோக்கியமானது.

இல்லையேல் நோய் அறிகுறியுடன் அதிகளவான வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம். அதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 10 சூரி 5 செவ் 6 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: CTB நடத்துநர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>உள் நாடு மட்டும்<br>தொ.இ: B/12086 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 13 செவ் 10 சூரி 11 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: தகுதியான அரச,தனியார் தொழில்<br>தொ.இ:G/7104 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி 10 செவ் 11 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Assistant Manager (Canada)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் வெளிநாடு ஆயின் கனடா மட்டும்<br>தொ.இ: B/12089 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 18 செவ் 4 சூரி 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: உயர்தரம் (கணவரை இழந்தவர் பிள்ளைகள் இல்லை)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக் கொள்ளப்படும்<br>தொ.இ:G/7107 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 20¾ செவ் 4 சூரி 3 இல்<br>உயரம்: 171 cm<br>தகைமை/தொழில்: ஆசிரியர் பட்டதாரி (BA)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12091 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: சூரி 8 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி DO<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மணமகன்<br>தொ.இ:G/7126 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 76 சூரி 8 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: தையல் (விவாகரத்தானவர்)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் ஏற்றுக் கொள்ளப்படும் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12092 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 18¾ சூரி 9 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: Bachelor of Business Administration Assistant Register<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer கொழும்பில் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/7192 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன்
சேவைக் கட்டணமாக ரூபா 500



நடேஸ்வர அன்னையின் வாழ்த்துக்கள்

# சேவைநலன் பாராட்டு



செல்வி. கந்தையா இராஜேஸ்வரி

(பட்டதாரி (கலை), பட்டப்பின் டிப்ளோமா, முதுகலைமாணி)

சேவை விபரம்

| | |
| --- | --- |
| 1. யா/மகாஜனக் கல்லூரி | 23.02.1998 - 06.05.1998 |
| 2.யா/அருணாசலம் வித்தியாலயம் | 07.05.1998 - 31.12.1999 |
| 3.யா/மயிலிட்டி கலைமகள் | 03.01.2000 - 16.01.2014 |
| 4.யா/நடேஸ்வரக் கல்லூரி | 17.01.2014 - 31.12.2021 |

கல்விச் சேவையில் 24 வருடங்கள் ஆசிரியப் பணியை நிறைவு செய்து இன்று மணிவிழாக்காணும் செல்வி.கந்தையா இராஜேஸ்வரி அவர்கள் ஓய்வுக்காலத்தில் சகல வளங்களும் பெற்று நீடூழி காலம் வாழ அன்னை புவனேஸ்வரி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/நடேஸ்வரக் கல்லூரி. (9295)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு மாதங்களில் டெங்கு இரு மடங்காக அதிகரிப்பு

## விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர

(கொழும்பு)

**நாட்டில் கடந்த இரு மாதங்களுக்குள் டெங்கு நோய் பரவல் இரு மடங்காக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 10 ஆண்டுகளுக்குள் 2017 ஆம் ஆண்டு டெங்கு பரவல் தீவிரமாகக் காணப்பட்டது. 2017 இல் சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். அதன் பின்னர் இவ்வாண்டில் மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் 4 ஆயிரத்து 561 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். எனினும் டிசெம்பரில் இந்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 740 ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் மூன்றில் இரண்டு பேர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களாவர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மரணங்களின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்துள்ளது. எவ்வாறிருப்பினும் இது ஆரம்ப காலங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாகும்.

கொவிட் உள்ளிட்ட வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டெங்கு நோய் ஏற்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படாது. எனினும் கர்ப்பிணிகள் டெங்கு நோய்க்கு உள்ளாவது பாதிப்புக்களை ஏற்படுத்தும். எனவே கர்ப்பிணிகள் இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார். (4-5)

# பாராளுமன்ற தேர்தலை உடன் நடத்த வேண்டும்

## விதுர விக்ரமநாயக்க

(கொழும்பு)

அமைச்சரவை தோல்வியடைந்துள்ளதால் முழு நாடும் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டை நிர்வகிக்க முடியாவிடின் பாராளுமன்ற தேர்தலை நடத்துவது சிறந்ததாகும்.

தமக்கு தேவையான அரசாங்கத்தை தோற்றுவிக்க மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என கிராமிய கலை கலாச்சார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள விரக்தி நிலை நாளுக்கு நாள் அதிகரித்த நிலையில் செல்கிறது. தவறுகள் திருத்திக் கொள்ளப்படுவது அவசியமாகும்.

விவசாயத்துறை தொடர்பில் மாற்றுத்திட்டங்களை செயற்படுத்துவது அவசியமானதாகும். உணவு தட்டுப்பாடு ஏற்படும் என பொருளாதார நிபுணர்களின் எதிர்வு கூறல் குறித்து விவசாயத்துறை அமைச்சு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# பைசர் செலுத்தியோர் தொகை 40 இலட்சத்தை கடந்தது

(கொழும்பு)

நாட்டில் பைசர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 40 இலட்சத்தை கடந்துள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 644 பேருக்கு, பைசர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, பைசர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 40 இலட்சத்து 6 ஆயிரத்து 720 ஆக அதிகரித்துள்ளது. (4-5)



Help Age Srilanka நிறுவனத்தினரால் வெள்ளம் மற்றும் கொவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு ஒரு தொகுதி நிவாரணப் பொதிகள் கடந்த 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டன. (படம்- ரவிசாந்)

# எதிர்வரும் 26 அல்லது 27 இல் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திறக்கும்

## வலுசக்தி அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டின் டொலர் பற்றாக்குறை காரணமாகவே சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடவேண்டிய தீர்மானத்தை எடுக்க நேர்ந்தது. எனினும் ஜனவரி 23 ஆம் திகதி கச்சாய் எண்ணெயுடன் சர்வதேச கப்பலொன்று இலங்கைக்கு வரவுள்ள காரணத்தினால் ஜனவரி 26 ஆம் அல்லது 27 ஆம் திகதியளவில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை திறக்க முடியும் என நம்புவதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அவ்வப்போது மூட நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடே காரணமாகும். அரசாங்கத்திடம் டொலர்கள் இருக்கும் என்றால் எந்தவித தடையும் இல்லாது எமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

ஜனவரி மாதம் 23 ஆம் அல்லது 24 ஆம் திகதிகளில் கச்சாய் எண்ணெய் கப்பலொன்று இலங்கைக்கு வரவுள்ளது. அந்த கப்பலில் உள்ள எண்ணெய் இறக்கப்பட்டவுடன் 26 ஆம் அல்லது 27 ஆம் திகதிகளில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை திறக்க முடியும் என நம்புகின்றோம் என தெரிவித்தார். (4-5)

# ஒரே நிறுவனத்தால் மட்டும் அனுமதி வழங்கும் நடவடிக்கை

(கொழும்பு)

மண், மணல் மற்றும் கல் ஆகியவற்றை கொண்டு செல்வதற்கும் அகழ்வதற்குமான அனுமதி வழங்கும் நடவடிக்கைகள் இன்று முதல் ஒரே நிறுவனத்தால் முன்னெடுக்கப்படுமென புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு வருகைதந்து, சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியுமென அதன் தலைவர் அனுர வல்பொல தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியிலுள்ள புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் கிளை அலுவலகங்களில் இந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் கூறினார். (4-5)

# முதலாம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ODUS அக்கடமியின் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் US விடுதியில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் என். பவானந்தராஜா கலந்து கொள்வார். (4-5)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

2022 புத்தாண்டை முன்னிட்டு மேல் மாகாணத்தில் விசேட பாதுகாப்பு திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவா தெரிவித்தார்.

அதன்படி இன்று இரவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளினால் இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (4-5)

# வடமராட்சி அம்பனில் கூடியளவு மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிவரையான 24 மணித்தியாலங்களில் வட மராட்சி கிழக்கு அம்பனில் கூடிய மழை வீழ்ச்சியாக 73.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப்பகுதியில் தெல்லிப்பழையில் 66.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், அச்சுவேலியில் 62.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், சாவகச்சேரியில் 56.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், நயினாதீவில் 44.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், திருநெல்வேலியில் 42.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (4-5-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை ஆசீர் மிக்க ஆண்டாக இந்த ஆண்டு அமையட்டும்



2022 ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப் புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள் ஏக்கங்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர்மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

உலகக் கத்தோலிக்க திருச்சபையானது புதிய ஆண்டின் முதல் தினத்தை தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் ஆண்டு முழுவதிற்குமான அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும் பெற வேண்டும்படி பணித்து நிற்கிறது.

கடந்த ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது. புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு.

இப்புதிய ஆண்டு முழுவதும் தேவ அன்னை எம்மைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டை தொடங்குங்கள். ஆண்டு முழுவதிலும் தேவ அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாச மிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும் வேண்டித் தினமும் மன்றாடுங்கள். தேவ தாயை எப்போதும் எங்கிருந்தாலும் என்ன நடந்தாலும் உங்கள் அன்னையாக மனதிலிருத்தி என்ன செய்தாலும் அன்னையின் துணையுடன் செய்யுங்கள். அன்னை வெற்றியையே பெற்றுத் தருவாள்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து எத்தீங்குமின்றி வழிநடத்தி எம் அனைத்துத் தேவைகளிலும் நிறைவு செய்ய இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

**கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**ஆண் டகை யாழ் ஆயர்**

# புதிய ஆண்டில் புதிய சிந்தனைகளோடு புதுமைகள் செய்ய புறப்படுவோம்



இனிய ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் வேகமாக கடக்கிறது.உலகம் நோய்களின் சீற்றத்தால் அல்லற்படுகிறது. விஞ்ஞானத்தின் விந்தைகள் ஆச்சரியத்தை தந்த போதிலும் இயற்கையை எவராலும் வெல்ல முடியவில்லை.

இயற்கையே இறை சக்தி. இறைவனை அனைவரும் எம்மைக் காத்தருளுமாறு வழிபாடு செய்யுங்கள். இந்த இனிய பிறப்பை நல்லவண்ணம் காத்து எமக்கும்,பிறர்க்கும் நன்மைகளைத் தேடுவோமாக. முகத்தை எவ்வளவோ அலங்கரித்த மனிதன் இன்று கண்ணுக்கு தெரியாத கிருமிக்கு அச்சப்பட்டு முகக் கவசம் அணியும் நிலைஏற்பட்டு விட்டது. இந்நிலைமாற வேண்டும்.உலகம் முழுவதும் நாம் நிம்மதியாக வாழும் நிலை உருவாகவேண்டும். இதற்காக இன்றைய நாளில்நன்றாக பிராத்தனை செய்வோம்.

அழகான இலங்கைத் திருநாடு அறத்தை தொலைத்ததனால் அல்லல்களை அனுபவிக்கின்றது.

என்று தர்மம் பிழைக்கிறதோ அதன்பின் எல்லாம் பிழைத்து விடும். இன்று எம்மண்ணில் போரில்லை. ஆனால் பொருளாதாரப் பலமிழந்து விட்டோம் நாளை என்னவாகுமோ என்று அச்சத்தோடு அனைவரும் வாழும் நிலை.எம்மண்ணில் தர்மம் நிலைக்கவேண்டும். பஞ்சமின்றி அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் நீதியோடு அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும். இவ்வேண்டுகோளை இந்நாளில் அனைவரும் இறைவனிடம் வேண்டுவோம்.

"கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்" எனக் கம்பராமாயணம் கூறியது. இன்று இலங்கை கடன் தொல்லையில் கதிகலங்கி, அண்டை நாடுகளிடம் கையேந்திக் காத்திருக்கிறது.இது நாட்டுக்கு மட்டுமல்ல நமக்கு எல்லோருக்கும் பாடமாக அமைந்துள்ளது. நாடு நல்லாய் இருந்தல்த்தான் நாம் எல்லோரும் நல்லாய் இருக்கமுடியும் . நாட்டுக்காக அனைவரும் பிராத்திப்போம். ஆடம்பரமான, அர்த்த மற்றகாரியங்களை நிறுத்துவோம். கடினஉழைப்பினால் எம்மை நோக்கிவரும் இடர்களை வெல்வோம். அன்பான உறவுகளே கடந்து சென்ற ஆண் டில் நாம் விட்டதவறுகளை நினைந்து கடவுளிடம் மன்னிப்பு கேட்போம். புதியஆண்டில் புதிய சிந்தனையோடு புதுமைகள் செய்யபுறப்படுவோம். காலம் மிகவும் பெறுமதியானது உயிருக்கு சமமானது. எனவே புதிய ஆண்டில் அனைவரும் நல்ல திட்டமிடல்களோடு நல்ல வண்ணம் வாழமுற்படுவோம்.

பிறரைகுறை கூறுவதை விடு த்துநாம் என்னசெய்தோம் என நமக்குள்ளே கேள்வி எழுப்பி சாதிக்கதயாராவோம். புதிய ஆண்டில் அனைவரும் சகல வளங்களோடும் சிறப்பாக வாழத் துர்க்கை அம்மனைப் பிரார்த்தித்து. அனைவருக்கும் நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித் துக் கொள்கிறேன்.

**செஞ்சொற்செல்வர்.கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர்- தெல்லிப்பளை துர்க்காதேவிதேவஸ்தானம்,**
**தவைவர் -சிவபூமி அறக் கட்டளை.**

# புதிய நம்பிக்கையுடன் புதிய ஆண்டில் கால் பதிப்போம்



உலகம் 2021 ஆண்டுகள் நிறைந்து 2022இல் புத்தாண்டு பிறக்கிறது என்று இதயம் பொங்கிமகிழும் மக்கள் கொண்டாடும் புத்தாண்டு வாழ்க என வாழ்த்தி நிற்கின்றோம்.

எல்லோரும் எதிர்காலம் சிறந்தவாழ்வைத் தருமென்று புதிய நம்பிக்கையுடன் புத்தெழுச்சி யுடன் இதயம் பொங்கி வாழ வேண்டு மென வாழ்த்துகிறோம்.

2021 பிறந்தபொழுது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் நோய் தொற்றால் இலட்சோப இலட்சம் மக்கள் உயிர்களைப் பறிகொடுத்தும், உயிர்களுக்காகப் போராடிக் கொண்டுமிருந்தனர்.

தினமும் பசியால் பட்டினியால் வாழ்விழந்தமக்கள் பெருக்கமும்,நோயில் வீழ்ந்து உயிருக்காகப் போராடும் மக்களும், அடிமைத்தளையறுத்துச் சுதந்திரமாய் ஆளும் நாடுகளும், மக்கள் விடுதலைக்காக பிளவுற் றும் உயிர் கொடுத்தும் விடுதலைக்காய் போராடுவோருமாய் உலகம் இருண்டும்கிடக்கிறது.

தைபிறந்தால் நல் வழிபிறக்கும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டுவாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

**மாவை.சோ.சேனாதிராசா,**
**தலைவர், இ.த.அ.கட்சி**

# ஒப்பற்ற புத்தாண்டாய் பிறக்க வேண்டும்!



உலகமெலாம் மகிழ்ச்சிதனைஅள்ளித்தந்து
ஒப்பற்றபுத்தாண்டும் பிறக்கவேண்டும்
நிலமுழுதும் உயிர்களெலாம் துன்பம் நீங்கி
நிம்மதியும் பேரன்பும் கொள்ளவேண்டும்
வளமுடனேஉயிரனைத்தும் வாழ்ந்துஓங்க
வற்றாதமனஉறுதிவாய்க்கவேண்டும்
அலகதிலாவிளையாட்டைக் கொண்டஅந்த
ஆண்டவனின் கருணையதும் சிறக்கவேண்டும்.

எம்மதமும் சம்மதமாம் என்னும் பொய்யை
ஏற்றுரைத்துமதிமயங்கிநின்றிடாமல்
தம்மதமேதமக்குஉயிர் என்றுபோற்றித்
தரணியிலேமனிதரெலாம் வாழவேண்டும்
செம்மையுறமனிதகுலம் சிறந்துவாழச்
செய்வதுதான்சமயமெலாம் பிறந்தநோக்கம்
நம்முடையசமயம் போல் மற்றைநல்ல
நலமிகுந்தசமயங்கள் போற்றிவாழ்வோம்.

உணர்வுகளின் பகிர்வுக்கேமொழிகள் தோன்றி
உலகனைத்தும் ஒன்றுபடச்செய்ததம்மா!
தினவெடுத்தசிலரோதம் மொழியே இந்த
திகழ் புவனம் அதில் உயர்வாம் என்றேஓதி
வினைவிதைத்து பகை வளர்த்துவீணாய் மோதி
வேற்றுமைகள் வளர்க்கின்றார்.வீணர் சொல்லும்
பனைஅளவாம் பொய் தகர்த்துப் பாரில் நல்ல

பண்பதனால் உறவுதனைப் படரச்செய்வோம்.
ஆண்டெமக்குச் சித்திரையில் தான் பிறக்கும்
ஆனாலும் செயல் அனைத்தும் செய்வதாலே
பூண்டதொருசெயல் ஆண்டாய் இதனைக் கொண்டு
போற்றிடுவோம்!தவறில்லை!புனிதம் மேவும்
நீண்டபெரும் கிரியையெலாம் தமிழர் ஆண்டில்
நினைந்தேதான் நேர்படவேசெய்துஉய்வோம்.
தாண்டுகிறபுத்தாண்டின் தவற்றையெல்லாம்
தரணியதில் நீக்கிடுவோம் தலைமைகொள்வோம்.

அரசியலார் மனங்களிலேஅறமேநின்று
அதனாலேமனிதகுலம் தழைத்தோங்கட்டும்
அறிவியலார் மனங்களிலேஉண்மைநின்று
அதனாலேஅறிவுலகில்நலமோங்கட்டும்
நெறிபிறழாஅன்பதனைநெஞ்சமேற்று
நேர் நின்றுசமயங்கள் நிமிர்தோங்கட்டும்
வறுமையெலாம் தொலைந்திடவேஉழவர் தங்கள்
வற்றாத உழைப்பதனால் உலகோங்கட்டும்.

**கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்**

# சவால்களை சாதனையாக்கும் புத்தாண்டை வரவேற்போம்

வரவேற்போம் நாம் வரவேற்போம்
புத்தாண்டை புன்னகையோடு வரவேற்போம்
சவால்களை வென்று சரித்திரம் படைக்க
சாதனை படைக்கும் புத்தாண்டாய் வரவேற்போம்
எண்ணங்கள், சிந்தனைகள், செயல்களாக
சோதனைகளை வேதனைகளை வென்று
சாதனைகளால் சரித்திரம் எழுதும் ஆண்டாக
புத்தாண்டைபுதுமெருகுடன் வரவேற்போம்
உழைத்துண்டு வாழும் மக்கள் சமூகமாக
நல்லுறவை பலமாக்கும் ஆண்டாக வரவேற்போம்
நற்சேவை பணிகளில் இணைந்து நற்சமூகம் மலர
நம்பிக்கை ஊட்டும் நற் செயல்களால்
நாநிலம் சிறக்கும் புத்தாண்டை வரவேற்போம்.
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**கலாபூஷணம் செ.யோசப்பாலா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

## திருமதி. ரேணுகா சிவராசா

(பிரதி அதிபர்)

இலங்கை ஆசிரியர் சேவை தரம்–1, பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆரம்பக்கல்வி

(26.03.1990 – 31.12.2021 வரை)



**ஆசிரியர் சேவை விபரம்**

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

26.03.1990–22.06.2009

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

23.06.2009–31.12.2021 வரை

பள்ளிக்காலத்துத் தண்மதியே!தாய்ப்பசு நாடும் கன்றென
துள்ளிவரும் பிஞ்சுகளை அள்ளியெடுத்து குற்றமில்லா
கல்விக் கவியமுதம் தந்தீர்! பொறுமையிற் பூமியைப் போல்
வேரோடு உரமாக நின்று வித்தை சொன்ன வித்தகியே!
அமைதிகொள் திருவதனம் ஈடில்லாத் தன்னடக்கம் கொண்டு
பொறுமையின் சிகரம் தொட்டீர் அகவை அறுபதில் சேவை போற்றி
உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்

(9338) யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.



குருவே துணை

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

# மனவளக்கலை யோகப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருகோவில்

அன்பர்களுக்கோர் இனிய செய்தி..!

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்.
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான உலகப்பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய
"மனவளக்கலையை"

**இன்று பிறக்கும் புத்தாண்டு (01.01.2022) முதல் இந்த ஆண்டு முழுவதும்
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் நடைபெறும் அனைத்து பயிற்சிகளுக்கும்...**

- முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்பம்
- அடுத்து வரும் அகத்தாய்வு 1...2...3... பயிற்சிகளுக்கும்

அன்னை பார்வதி அறக்கட்டளையைச் சார்ந்த அன்பர்கள் பெருமனம் கொண்டு அனுசரணை வழங்கி திருவுளம் கொண்டுள்ளார்கள்
என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்...

**எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்**

✦ உடல் நலத்திற்கு -எளிய முறை உடற் பயிற்சி ✦ உயிர் வளத்திற்கு- சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி

✦ மன அமைதிக்கு-தியான பயிற்சிகள் ✦ அறிவு வல்லமைக்கு-அகத்தாய்வு பயிற்சிகள் ✦ உறவுகள் மேம்பட- தற்சோதனைப்பயிற்சிகள்

காலம்:- 01.01.2022 (சனிக்கிழமை) நேரம்:- மாலை 5.00 தொடக்கம் இரவு 7.00 மணி வரை

பயிற்சி வழங்குபவர்: துணைப்பேராசிரியர் த.நந்தகுமார், துணைப்பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா மற்றும்

அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி, அருள்நிதி க.ஜெயராணி

வருக வருக நலம் பெருக பெறுக
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்


(9343)

தொடர்புகளிற்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல.81 பிறவுண் [illegible] கொக்குவில் யாழ்ப்பாணம்.

இல:- 021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாமியே சரணம்!
ஐயப்பனே சரணம்!
சரணம் சரணம் ஐயப்பா!

## வன்புலி வாகனனே! சரணம் ஐயப்பா!!

# சகலவிதமான ஐசுவரியங்களையும் வாழ்க்கையில் கிடைக்கச் செய்யும் ஐயப்ப சுவாமியின் அருள் மகிமை பற்றி காரை மணிகண்டன்



காரை மணிகண்டன்

எங்கும் எதிலும் எப்போதும் பரந்து நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சபரி மலை ஐயப்பன் சுவாமி வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருள் புரிகின்ற தனிப்பெரும் தெய்வமாவார். நாங்கள் போற்றித் துதிக்கும் ஐயப்பர் சுவாமியின் அருளுக்கு எல்லையே இல்லை. புலிப்பால் கொண்டு வந்து புதுமை மிகு அற்புதம் செய்தருளிய அதி உயர்ந்த தெய்வம் அவர். எங்களுக்கு ஆனந்தத்தை அள்ளித் தந்திடும் அன்புத் தெய்வமும் அவரே! தெரிந்து கொள்வீர்! இது வரை காலமும் இலைமறை காயாக இருந்த இந்த ஐயப்பன் வழிபாடு இப்போது உத்வேகம் கொண்டுள்ளது. "சரணம் ஐயப்பா! சாமியே சரணம் ஐயப்பா!" என்ற பக்திரசம் ததும்பும் கோசமானது செல்லும் இடமெல்லாம் கேட்கின்றது. சபரி மலை ஐயப்பனின் அருட்கடாட்சம் எங்கும் பரந்து விரிந்து பரவத் தொடங்குகிறது. விரத காலத்தில் வீதி வழியே போகும் போதும் வரும் போதும் ஐயப்பன் சுவாமியின் மாலை அணிந்து நோன்பிருக்கின்ற ஐயப்ப அடியார்களைக் காண்கின்றோம். எங்கள் வழிபடு தெய்வமான ஐயப்பனின் தூய திருவரட்கடாட்சம் வெளிக்கொண ரப்பட்டுள்ளமை எங்கள் மனதிற்கு மிகுந்த திருப்தியையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றது.

மானிட சமுதாயத்தில் உண்மையும் நேர்மையும் மிகவும் அவசியமானது. காலச் சக்கரமானது உருண்டோடுவது போல மனிதனுக்கு இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன. இஃது உலக நியதியாகும். இன்பத்தைக் கண்டு மகிழ்வதும் துன்பத்தைக் கண்டு துவழ்வதும் மனிதனுடைய இயற்கை சுபாவமாகும். கஷ்டத்திலும் கவலையிலும் கிடந்து உழலும் மனிதனுக்கு நிம்மதியும் நித்திரையும் கட்டாயத் தேவையாகும். இந்த அத்தியாவசியத் தேவையை நிறைவேற்றி வைக்கின்ற ஒரு உன்னதமான உயர்ந்த தெய்வம் எங்களுடைய ஐயப்பர் சுவாமியே!

எங்களுடைய வாழ்க்கையில் ஆறுதலும் தேறுதலும் தருகின்ற உண்மைத் தெய்வமும் ஐயப்பனே ஆவான். கலியுகத்தில் எமக்கு கண்கண்ட தெய்வமாக மிளிர்கின்ற தனிப்பெருங் கடவுள் ஐயப்பனே என்பதில் எள்ளளவும் சந்தேகமேல்லை. உண்மையான நம்பிக்கையுடன் கைதொழுபவர்களை ஐயப்பன் ஒருபோதும் கைவிடமாட்டான். எமது வாழ்க்கை வளம் பெற ஐயப்பனின் விரதம் நோற்கும் அடியார்கள் குறைந்தது நாற்பத்தொரு நாட்களாவது விரதம் காத்தல் வேண்டும். சபரி மலைக்கு பல முறை யாத்திரை சென்று வந்த ஐயப்பர் சாமிப் பக்தர்களில் ஒருவரை குருவாக ஏற்றுக் கொண்டு அவருடைய திருக்கரங்களால் மாலை அணிய வேண்டும். அல்லது தாய். தந்தையர் மூலமாக மாலை அணிந்து கொள்ளலாம். மாலை அணிந்தவர்கள் குருசாமியை முழுமனதோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"சாமியே சரணம் ஐயப்பா!" என்று தாரக மந்திரத்திற்கு அமைய நடந்து கொள்ள வேண்டும். ஐயப்பர் விரதம் இருப்பவர்கள் முதலாவதாக கறுப்பு நிற ஆடையை அணிய வேண்டும். அதுவே சிறப்பைத் தரும். பின்னர் விரத காலம் கடந்து அடுத்தடுத்த வருடங்களில் பச்சையோ அல்லது மஞ்சள், நீலமோ என்று ஏதாவது ஒரு நிற ஆடையை மட்டுமே அணிந்து கொள்ளுதல் வேண்டும். அத்துடன் ஐயப்பர் மாலை அணிந்து மலைக்கு செல்பவர்களை ஒருபோதும் தடுத்து நிறுத்தக் கூடாது. தர்மசாஸ்தா சொற்படி கேட்டு நடத்தல் வேண்டும். இம்மியளவும் கொஞ்சம் கூட ஒழுக்கம் தவறவே கூடாது.

ஐயப்பன் விரதகாரர் பிரம்மச்சரிய விரதத்தை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். தினமும் நீராடி தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து நெற்றியிலே திருநீறு பூசி காலையும் மாலையும் ஐயப்பனை பக்தியுடன் வணங்க வேண்டும். மேலும் ஐயப்பர் விரத காரருக்கு ஆலய வழிபாடு மிகவும் முக்கியம். தீய எண்ணங்கள் ஆகாது. அதை மறந்தே விட வேண்டும். உடம்பிலே எண்ணெய் தேய்த்து குளிப்பதும் முகச் சவரம் செய்வதும் தங்க நகைகள் அணிவதும் காலணிகள் போடுவதும் தவிர்க்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது. அதுமட்டுமன்றி நவக்கிரகங்களின் செயற்பாட்டையும் தீய விளைவுகளையும் முற்றாக தகர்த்தெறியும் அதீத சக்தி படைத்தவன் எங்கள் ஐயப்பன். சனீஸ்வரன் கூட ஐயப்பர் விரதகாரர்களை அணுக மாட்டார். இது முற்றிலும் உண்மை.

**"எத்தனை கண்கள் இருந்தாலும் அத்தனை கண்களும் போதாது எங்கள் சபரிமலை ஐயப்பனின் எழில் காண"**

(9336) **லயன் கௌரவ கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம் - காரைநகர் சமாதான நீதிவான்களுக்கான அமைப்பின் பிரதேச சபை அமைப்பாளர் கண்டி மாநகர "இரத்தின தீபம்" அமைப்பின் செயலாளர் - காரை மணிகண்டன்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வாதரவத்தை விக்னேஸ்வர

# உயர்திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம்



## ஆசிச் செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது முதுமொழி. நமது பண்பாட்டில் ஆசிரியர் 'குரு' என்று போற்றப்படுகிறார். வழிதெரியாமல் தவிப்பவனுக்கு வழி காட்டுபவர் போல, கல்வி அறிவையும் ஒழுக்க நெறிகளையும் போதித்து உலக வாழ்வில் நல்ல நிலையை ஏற்படுத்தி இறுதியில் இறைபதத்தை அடைய வைப்பதற்கும் ஆசிரியர் அடித்தளம் போடுகிறார்.

இந்த வகையில் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திரு.J.A.தவநாயகம் அவர்கள் தமது ஆசிரியப் பணியை சிறப்புறச்செய்து அனைவரது நன்மதிப்பையும் பெற்றுள்ளார் அதுமட்டுமல்லாமல், அதிபராகப் பணியாற்றி இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு நன்கு பாடுபட்டிருக்கிறார். அதனால் ஊரவர்களின் மதிப்பையும் பெறுகிறார். அவரது பணிகளைப் பாராட்டி ஓய்வுபெற்றுச் செல்லும் அவர் தமது ஓய்வுக்காலத்திலும் மேலும் நற்பணிகள் ஆற்றி நற்புகழ் அடைந்து ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் நீண்டகாலம் நல்வாழ்வு வாழ ஆசி கூறி நிற்கிறேன்.

**சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள்-பிரதமகுரு,**
கேதுவுப்பிள்ளையார் கோயில்
வாதரவத்தை, பிரதமகுரு, சிவன் தேவஸ்தானம், புத்தூர்.



## அரசாங்க அதியரின் வாழ்த்துச்செய்தி

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் திரு.J.A.தவநாயகம் அவர்களின் மணிவிழா நிறைவை முன்னிட்டு மலரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற சொலச் சொல்லுவார்" என்னும் வள்ளுவனின் வாக்குக்கமைய கற்றவர்களுள் கற்றவர் என்று புகழப்படுகின்றவர்கள் கற்றவர் அவையின் முன் தாம் கற்றதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு எடுத்துச் சொல்லக் கூடியவாரக விளங்குகின்றார்.

திருவாளர்.ஜே.ஏ.தவநாயகம் அவர்களது ஓய்வுக் காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு, அவரது சேவைக்கு நன்றிகூறி விழா எடுக்கும் மணிவிழா குழுவினரையும் பாராட்டி மலரும் மணிவிழா மலர் சிறப்புடன் வெளிவர என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**கணபதிப்பிள்ளை மகேசன்**
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.



## உயர்ச்சிக்கு உறுதுணையானவர்

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களை வாழ்த்துவதில் உவகையடைகின்றேன். 1985.04.16 ஆம் திகதி களு/அல்ஹுமைசரா மத்திய கல்லூரியில் ஆசிரியராக தனது அரச சேவையினை தொடங்கி 14 ஆண்டுகள் ஆசிரிய பணியினை சிறப்பாக மேற்கொண்டுள்ளதுடன் 1999.09.23 முதல் 2009.07. 06 வரை யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக (சமூகக்கல்வி - வரலாறு) கடமையாற்றியதுடன் 2009.07.07 ஆம் திகதி முதல் தனது அதிபர் பணியினை தொடங்கி இன்றுவரை பாடசாலை செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு மாணவர்களின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார். அந்த வகையில் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் தனது ஓய்வுக் காலத்தினை சகல சிறப்புக்களுடனும் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைவதற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.இளங்கோவன்**
செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம்.



## வாழ்த்துச் செய்தி

திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்கள் நெடுந்தீவினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்ப இடை நிலைக் கல்வியினை நெடுந்தீவினில் கற்ற அவர் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாவார். அத்துடன் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சியினையும் பெற்றவராவார். பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகவும், யாழ்.கல்வி வலயத்தில் சமூகக் கல்விப் பாட ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றியுள்ள இவர் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வுபெறும் வரை யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

மிகவும் கஷ்டமான பிரதேசத்தில் அமைந்துள்ள இப் பாடசாலையில் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இப் பாடசாலை மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்து விளங்குவதற்கும் இவரது சிறந்த தலைமைத்துவம் வழிகோலியுள்ளதெனலாம். இவர் தனது சேவைக் காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.



## சேவை நயந்த சீராளனுக்கு வாழ்த்துக்கள்

வடபுலத்தின் முதன்மை வலயமான யாழ்.வலயத்தின் வடக்கெல்லையில் வாதரவத்தை பிரதேச கல்வி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி ஓய்வுநிலை அடைந்து மணிவிழாக் காணும் அன்புக்கும் பண்புக்கும் உரிய அதிபர் திருவாளர் J.A.தவநாயகம் அவர்களின் சேவையின் சிறப்புக்கும் அனுபவ முதிர்வுக்கும் தளர்வற்ற ஆளுமைக்கும் மதிப்பளித்து வாழ்த்துகின்றேன்.

அகவை அறுபதை அடைந்து ஓய்வு நிலைக்குச் சென்று மணிவிழாக் காணும் அதிபர் 37 வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் நெடுந்தீவில் பிறந்து களுத்துறை முதல் வாதரவத்தை வரை பல கல்விக்களம் கண்ட ஒருவர். யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் கல்விச் சிறப்புக்கு ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக விடாமுயற்சியுடன் செயற்பட்டு வெற்றி கண்ட கல்வியாளன். இவரது ஓய்வுக்காலம் சுபீட்சமாகவும் சிறப்பாகவும் அமையவும் மணிவிழா சிறக்கவும் எனது வாழ்த்துக்கள்.

**மு.இராதாகிருஷ்ணன்**
வலயக் கல்வி பணிப்பாளர், யாழ்.வலயம்.



## மணியான குணமுள்ள நல்லாசான்

ஈழத்தின் மணி முடியாம் யாழ்.மண்ணில் நீர்வளமும் நில வளமுமுள்ள வாதரவத்தையில் கிரீடமாய் இயங்குகின்ற கல்விக் கூடமாய் யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் தனில் 13 வருடங்களாக அதிபராய் இணைந்து இணையில்லா சேவை தனையாற்றிய நம் குரு மணிவிழா காணும் மணியான குணமுள்ள நல்லாசான். தவநாயகம் ஆசிரியராய் பல பள்ளியில் நியமனம் பெற்று பணிதனில் பற்றுடனே சேவைகளில் ஒழுக்கமும் பேணி மாணவருக்கு முன்மாதிரியாக நடந்து அன்புடனே ஆசிரியர்களுடன் இணைந்து சிறந்த நல்ல சேவை புரிந்த எம் அதிபர் சிறப்புக்கள் பலவற்றையும் பெற்று நோய் நொடிகளின்றி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**து.ஜெகதீஸ்வரன், செயலாளர்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்.



## ஆசிச்செய்தி

கண் எனத்தக்க எண்ணையும் எழுத்தையும் தனது வாழ்வின் முகவரியாகக் கொண்டு, கல்வி எனும் விதையை மாணவ விளைநிலங்களில் தூவி, பல நூறு அறுவடைகளின் நாயகனாக வலம் வரும் திருவாளர் யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களை அவரின் அறுபதாவது அகவையில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

நெடுந்தீவின் கல்விப் பாரம்பரியப் பட்டியலில் இடம் பிடித்த ஆசிரிய சேவைக்கு அழகு சேர்த்து பட்டப் படிப்புக்களால் தன்னை செதுக்கி, ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக நீங்கள் ஆற்றிய சேவை மகத்தானது. நடந்துவந்த பாதைகளும் கரடுமுரடானவையே. சவால்களைத் தோளின் தூசியெனத் தட்டி, இலக்கு ஒன்றே மாணவர் - ஆசிரியர் நலன் என வாழ்ந்த உங்கள் பணியில் மெய் சிலிர்த்து நிற்கிறது கல்விச் சமூகம்.

யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வெற்றிப் படிக்கட்டுக்கள் உங்களை என்றும் நன்றியுடன் நினைவுபடுத்தி நிற்கும். மணிவிழா வாழ்த்துக்கள் மகிழ்வுடன் கூறி ஆசீர் நல்கி நிற்கும்.

**அருட்திரு செ.றோய் பேடினன்**
பங்குத்தந்தை அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயம்.



## நிலைக்கட்டும் நின் அரிய சேவை

தவத்தின் நாயகனே,
நெடுந்தீவு நின் பிறப்பிடம் அச்சுவேலியோ வசிப்பிடம்
கடும் முயற்சியுடன் கல்வியில் வளர்ந்திட்டாய்
பயிற்சி ஆசிரியராய் பதவியில் அமர்ந்திட்டாய்
முயற்சியால் பேராதனையில் இளமாணியை பெற்றிட்டாய்
ஆசிரியராய் நின்று வரலாற்றை வழிகாட்டினாய்
பேருவளையில் பேர்சொல்ல அங்கும் வரலாறானாய்
நேபொடை குளோடனில் நேரிய சேவை புரிந்தே
யாழ்.மண்ணில் கால்பதித்து ஆசிரிய ஆலோசகரானாய்
நாளும் பொழுதும் நற்சேவை புரிந்திட்டாய்
முதுமாணி கண்டாய் முழுமைபெற்று நின்றிட்டாய்
அதிபர் பதவியிலே அடுத்தே கால் வைத்திட்டாய்
வாதரவத்தையின் அசுர வளர்ச்சிக்கு ஆணிவேராகிவிட்டாய்
ஐந்தாம் தரத்திலோ அனைத்து மாணவருமே சித்திப்புள்ளி
சாதாரண தரத்தில் சமயம், வரலாறு நூறுவீத சித்தி பெற
ஏழை மாணவர் கிராமத்தில் ஏற்றி வைத்தாய் தீபம்
எக்காலமும் அறியாத வரலாற்றின் மூலம்
கோப்பாயில் இருக்கையிலோ குலாவினோம் கூடி
கோலாகலமாக நிகழட்டும் மணிவிழா எல்லோரும் கூடி
வானம் தொடும் புகழ் எழவே வாழ்த்துவோர் கோடி
வாழவேண்டும் ஓய்வுக்காலம் மகிழ்வுடனே கூடி

**A.S.சற்குணராஜா**
பணிப்பாளர் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு,
மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.



## ஆளுமையின் அடையாளம்

மணிவிழாக் காணும் மதிப்பிற்குரிய அதிபர் திரு. யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்கள் கல்வித்துறையில் சான்றாண்மை பெற்று எல்லோர் மனதிலும் என்றும் நிலைத்திருப்பவர். தனது 36 வருட 08 மாத சேவையிலிருந்து ஓய்வுபெறும் இவரின் ஆளுமைகள் சொல்லில் அடங்காதனவாகும்.

இவர் தொழில் வரிசையிலே முதன்மையானதாகவும் புனிதமானதாகவும் போற்றப்படும் ஆசிரியத் தொழிலிலே 1985 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆம் திகதி காலடி எடுத்து வைத்தார். பதின்னான்கு வருடங்கள் சேவையாற்றிய பின்னர் 23.09.1999 ஆம் ஆண்டு சமூகக்கல்வி, வரலாறு பாட ஆசிரிய ஆலோசகராக பொறுப்பேற்று பத்து வருடங்கள் எமது வலயத்திலே அரும்பாடுபட்டு உழைத்தார்.

இவரின் ஆளுமைகளைக் கண்டு யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தை 07.07.2009 ஆம் ஆண்டு ஒப்படைத்தார்கள். இப்பாடசாலை 2019 O/L பெறுபேறுகளில் 100% சித்தி பெற்றது இவரின் ஆளுமையால் என்றால் மிகையாகாது. பன்னிரண்டு வருடங்கள் 08 மாதங்கள் இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி 31.12.2021 இல் ஓய்வுபெறும் இவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு.த.பாலராஜ்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்.



## இளமைத் துடிப்பான முகாமையாளன்

திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்கள் அதிகஷ்ட பிரதேசமான யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் 12 வருடங்கள் 5 மாதங்கள் எதுவிதகளைப்போ, சலிப்போ இன்றி இளமைத் துடிப்புடன் நவீன கல்வி நுட்பங்களைப் பிரயோகித்து கல்விப் பணியாற்றிய ஒரு பெருந்தகை. மாணவர்களின் அடிப்படை அறிவாற்றலான எண், எழுத்து, வாசிப்பில் கவனம் செலுத்த ஆசிரியர்களை வழிப்படுத்தி, மாணவர்களை வகுப்பறைக் கற்பித்தலுடன் பொருந்திச் செல்ல வழிகாட்டுபவர். கல்வி அதிகாரிகளை பாடசாலையை தரிசிக்க வரும்படி வலிந்து அழைப்பவர்.

பாடசாலைச் சமூகத்தில் நேர்மனப்பாங்குடன் பணியாற்றியமையின் விளைவாக "சமூகப் பாடசாலையாக" யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் மாற்றம் பெற்று அதன் பெறுபேறுகள் உயர்வடைந்து கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கும், யாழ்ப்பாண கல்வி வலயத்துக்கும் என்றும் பெருமை சேர்க்கும் பாடசாலையாகத் திகழ வைத்த பெருமை திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களையே சாரும். அவரது ஓய்வுக்காலம் எல்லா நலன்களும் பெற்று, நோய் நொடியின்றி குடும்பத்தினருடன் மகிழ்வாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.நா.சிவநேசன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம், கோப்பாய்.



**திரு.யோசேப்பு அன்ரனி**
BA.Spl.Trd, P.G.D.E, M.e
பிறப்பிடம்: நெடுந்தீவு
பிறந்த திகதி: 01.01.19
பதவி: அதிபர் இலங்கை அதிபர் சே
சேவை விபரம் : (36 வருடங்கள்
ஆசிரியராக: முதல் நியமனம்: 1
16.04.1985–07.02.1
களு/அல்ஹுமைசரா மத்திய கல்லூரி
பேருவளை.
08.02.1988–31.12.1
பலாலி ஆசிரியர் கலாசாலை –
01.01.1990–14.05.1
களு/குலோடன் தமிழ் மகாவித்தியா
15.05.1998–22.09.1
யா/ கோண்டாவில் பரஞ்சோதி
ஆசிரிய ஆலோசகராக:– 23.09.19
சேவைக்கால ஆசிரிய ஆ
(சமூகக்கல்வி –வரலா
யாழ்ப்பாணக் கல்வி வ
அதிபராக: 07.07.2009–31.
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்
(12 வருடங்கள் 5 மாத



## வெற்றி நாயக வாழ்த்து

மணிவிழா நாயகனின் ஆளு
பண்புகளான புலனடக்கம், நிலை
நவீன தொழில்நுட்ப அறிவு, சுற்று
கையாளும் திறன், தீர்மானம் எடு
நேரம் தவறாமை, எந்த இடரிலு
நகர்வு, பாடசாலை வளாகத்தின் க
ஆர்வம், எப்போதும் வளர்ச்சிப் போ
வர்கள், உயரதிகாரிகள் நலன் விரும்பிகளுடன் பாடசாலை
நகர்வு, இதனைவிட மிகவும் உயர்வான ஒரு செயல் தனது
வருடத்தில் முழு நாட்களும் பாடசாலையின் செயற்பா
அர்ப்பணித்ததன் காரணமாக பாடசாலையின் வளர்ச்சியி
சிகரத்தை அடைந்துள்ள இன்றைய மணிவிழா நாயகனுக்
எனும் வரலாற்று மலரினையும் வெளியீடு செய்து பாடசாலை
கௌரவிக்கப்படுகின்றார்.


ஒரு அதிபருக்கு இருக்க வேண்டிய பண்புகளை
பாடசாலையின் மதிப்பார்ந்த முதல்வர் திருவாளர் யோசேப்
எமது பாடசாலையை கோட்டம், வலயம், மாவட்டம்,
வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கிச்சென்று பெருமை சேர்க்
வளங்களில் தன்னிறைவைப் பேணுவதற்கும் அரும்பாடு
மணிவிழாக் காணும் மதிப்பார்ந்த முதல்வர் அவர்
பாரட்டுவதுடன்,

அவர்களது ஓய்வுக்காலம் குடும்பத்தினருடனும், சமூக
மகிழ்வாகவும் அமைந்து நீண்ட ஆரோக்கியத்துடன் என்
டவரின் திருவருள் கிடைக்க வேண்டி, மணிவிழாக்குழுவி
சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களை

**கணேசன் திருமால**
தலைவர், மணிவிழா குழு-ஆ
யா/வாதரவத்தை விக்னேஸ்வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வித்தியாலயத்தின் அதிபர்
# ...ம் அவர்களின் மணிவிழா சிறப்புமலர்



## ...ரனி தவநாயகம்
M.ed, DSM

...ந்தீவு
...1.1962
... சேவை - வகுப்பு 1
...கள் 08 மாதங்கள்)
...ம்: 16.04.1985
...02.1988
...லூரி, சீனன் கோட்டை,

...12.1989
... - ஆசிரிய பயிற்சி
...05.1998
...த்தியாலயம், நேபொட
...09.1999
...ாதி வித்தியாலயம்
...9.1999-06.07.2009
... ஆலோசகர்
...ரலாறு)
... வலயம்
...-31.12.2021
...வித்தியாலயம், புத்தூர்.
...மாதங்கள்)

## ...பகனை நன்றியுடன் ...த்துகின்றோம்

...ர் ஆளுமையில் செல்வாக்கு செலுத்தும் ... நினைத்ததை சாதிக்கும் வல்லமை, ... சுற்றறிக்கைகளை வினைத்திறனுடன் ...ம் எடுக்கும் திறன், கடமையில் சற்றும் ...டரிலும் தளர்வில்லாது முன்னோக்கிய ...தின் கவின்நிலை, சுகாதாரம் பேணலில் ...ரிப் போக்கான கற்பனை, அரசியல் தலை ...ாலை வளர்ச்சிக்கான சமயோசிதமான ...னது பணிக்காலத்தில் லீவு எடுக்காமல் ...ற்பாடுகளில் தன்னை முழுமையாக ...ச்சியில் முழு நிறைவான சேவையில் ...களுக்கு இன்று விழா எடுத்து, தவதீபம் ...சாலைச் சமூகத்தினரால் விழா நாயகன்

...களை தன்னகத்தே கொண்ட எமது ...ோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்கள் ...ட்டம், மாகாணம், தேசியம் என்ற ...சேர்க்க பாடுபட்டதுடன், பாடசாலையின் ...ம்பாடுபட்டு இன்று அகவை அறுபதில் ...அவர்களின் மகத்தான சேவையை

... சமூகத்தினருடனும் உன்னதமாகவும் ... என்றும் திகழ எல்லாம் வல்ல ஆண் ...குழுவின் சார்பாகவும், ஆசிரியர் கழகம் ...ளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**...மாலழகன்**
...ழ-ஆசிரியர் கழகம்,
...ஸ்வர வித்தியாலயம்.



### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

கல்விச் சேவையில் அதிக ஆர்வம் கொண்டவரான திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்கள் அதிபர் சேவையினை யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் ஆற்றி தற்போது மணிவிழாக் கண்டிருக்கின்றார். பாடசாலைக்கு அவர் வழங்கி வந்த சேவை அளப் பெரியதாக காணப்படுகின்றது. இவரது சேவைக்காலத்தில் இப்பாடசாலை கல்வி மற்றும் பௌதிக வளங்களில் அபிவிருத்தியடைந்து தனித்தன்மையுடன் மிளிர்வதனையும் காண முடிகின்றது. கல்விப் பணியில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அவர் வழங்கிய அளப்பரிய சேவையை உளமார நயந்து பாராட்டுவதில் பெருமிதம் அடைவதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

**திருமதி.சுபாஜினி மதியழகன்**
பிரதேச செயலாளர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.



### கல்வியே கருந்தனம் எனக் கருதிய தொண்டர்

வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வரவலாற்றில் கடந்த பன்னிரண்டரை வருட உயர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றிய அதிபர் திரு. ஜே.ஏ.தவநாயகம் ஆவார். அதிபர் அவர்கள் தனது 37 வருடகாலக் கல்விப் பணியை நிறைவேற்றி அரச சேவையில் இருந்து இளைப்பாறுகை பெறுகிறார். நெடுந்தீவு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழறிஞர் வண.தனிநாயகம் அடிகளாரின் மரபுவழி வந்தவர்.

அதிபர் தவநாயகம் அவர்கள் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்ற நாள் முதல் இவரது வழிநடத்தலில் பாடசாலை கற்றல் அடைவு மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகள் என்பன உயர்ச்சி பெற்று வந்துள்ளன. பாடசாலையின் பௌதிக வளம் குறிப்பிடத்தக்க அளவில் பெருகியுள்ளது. கல்வியே கருந்தனம் எனக் கருதிச் செயற்பட்டமையாலேயே இவரால் இப்படிச் சாதிக்க முடிந்தது.

அவரது மணிவிழா சிறப்புறவும் அவரது ஓய்வுக்காலம் இனிதாக அமையவும் எனதும் எமது குடும்பம் சார்ந்தும் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செந்தமிழ்ச் சொல்லருவி - சந்திரமௌலீசன் லலீசன்**
பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



### செயல் வீரன்

இயற்கை அழகால் சிறப்புறும் நெடுந்தீவில் 1962 இல் பிறந்த அன்ரனி தவநாயகம் அவர்கள் அளப்பெரும் சேவையாற்றி மணிவிழாக்காணும் இந்நாளில் மனமார வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

ஆசிரியப் பணியில் இருந்து அதிபர் பதவி வரை தம்மையும் வளர்த்து, தாம் சார்ந்த கல்விச் சமூகத்தையும் வளர்த்த தவநாயகம் ஒரு செயல் வீரன். தாம் கிறிஸ்தவராக இருந்த போதும் விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் சரஸ்வதி சிலை அமைத்து திறந்து வைப்பதில் முன்னின்று பணியாற்றியவர்.

இணைப் பாடவிதானச் செயற்பாடுகள், கல்வி அடைவு மட்டம் எனப் பலவழிகளிலும் பாடசாலையின் வளர்ச்சிகளை உறுதிப்படுத்தினார். இலங்கை அரசின் குருபிரதீபா விருதைப் பெற்ற J.A.தவநாயகம் அவர்கள் விக்கினேஸ்வர வித்தியாலய வரலாற்றில் பொற்காலத்தைக் காட்டிய செயல் வீரன் என்பது பட்டவர்த்தனமான உண்மை.

கடமையுணர்வு, தொழிற்பற்று, ஆளுமை என பல அம்சங்களையும் கொண்ட செயல் வீரன் யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களை மனமார வாழ்த்தி அவரது ஓய்வுக்காலம் ஆரோக்கியமும் சீர்சிறப்புக்களையும் பெற்று அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

**த.கோபாலகிருஷ்ணன்**
உப அதிபர் (SLTES III)
கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.



### தலைமைத்துவமும் வழிகாட்டலும் மிக்க முகாமையாளன்...

தனது பணியை நிறைவாக ஆற்றிய அதிபர் திரு. யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களை கௌரவிப்பது சமூகத்தின் கடமையாகும். இதில் நானும் பங்கெடுத்துக் கொள்வது மனநிறைவைத் தருகின்றது. கல்வி அடைவுகளிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் முன்னணியில் திகழ்வதில் பெரும்பங்கு அதிபர் திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களுக்குரியது என்பது எனது கணிப்பாகும். பாடசாலையை நேரடியாகப் பலமுறை தரிசித்தவன் என்ற ரீதியில் பாடசாலையை திறம்பட அவர் வழிநடத்தியமைக்குச் சான்றாக, தேசிய, மாகாண மற்றும் வலய மட்டங்களில் பல பரிசுகளை பாடசாலை பெற்றுக்கொண்டுள்ளது.

திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களுக்கு மணி விழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தனது திறமையையும் அனுபவங்களையும் கல்விச் சமூகத்துக்கு வழிகாட்ட பயன்படுத்த வேண்டுமென வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆ.நித்திலவர்ணன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.



### மனிதநேயத்தோடு பணியாற்றிய அதிபர்

தனது தலைமைத்துவ ஆளுமையால் எமது பிள்ளைகளின் கல்வியில் மட்டுமல்ல இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஆசிரிய சமூகத்தின் ஒத்துழைப்புடன் காத்திரமான பங்களிப்பை வழங்கி வந்திருக்கின்றார் திரு.ஜே.ஏ.தவநாயகம் அவர்கள். நாம் எப்போது வேண்டுமானாலும் அணுகக்கூடியவராகவும் எமது கருத்துக்களை அக்கறையோடு செவிமடுக்கக் கூடியவராகவும் திகழ்ந்தமையானது எமது பிரதேசத்துக்கு கிடைத்த 'வரப்பிரசாதமென்றே கூற வேண்டும்.

தனது பணி நெருக்கீடுகள், பல்வேறு விமர்சனங்கள் யாவற்றுக்கும் அப்பால் எமது பிள்ளைகளின் மீது அன்பு கூர்ந்து மனிதநேயத்தோடு பணியாற்றிய அதிபர் J.A.தவநாயகம் அவர்களை நாம் என்றுமே மறக்க முடியாது. தன்னுடைய மூன்று தசாப்தங்களுக்கு மேலான கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் இவ் வேளையில் அவரது சேவையினை பாராட்டுவதுடன் அவர் தனது குடும்பத்துடன் சகல வளங்களும் பெற்று இனிதே வாழ வாழ்த்துகின்றேன்.

**மா.இரத்தினசிங்கம்**
தலைவர், விவசாய சம்மேளனம், ...
பிரதேசசபை உறுப்பினர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

(C-3385)



### திரிகரண சுத்தியுடன் பணியாற்றியவர்

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் அதிபராக நற்பணியாற்றி ஓய்வுபெறும் அதிபர் J.A.தவநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதியார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

யாழ்.கல்வி வலயத்தில் எனது பணிக்காலத்தில் அதிபர் J.A.தவநாயகம் அவர்கள் சமூகக்கல்வி - வரலாறு பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகராக மாணவர் நலநோக்கில் அரும்பணியாற்றி பாடசாலைகளின் வரவேற்பைப் பெற்றவர். தொடர்ந்து யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்று மாணவர் மேம்பாட்டிற்காக அயராதுழைத்து பெற்றோர்களின் நன்மதிப்பினைப் பெற்றவர்.

எண்ணம், செயல், செயலால் தூய பணியாற்றி மகிழ்ந்த தங்கள் வாழ்வு வளம் பெறும். ஓய்வுக்காலம் இறையுணர்வும் அறநெறியும் இணைந்த உன்னத வாழ்வாக அமைய வாழ்த்துகின்றேன்.

**திருமதி.அ.வேதநாயகம்**
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்.



### சமாந்தர வளர்ச்சிக்கு வித்திட்டவர்...

ஒரு கிராமப்புறப் பாடசாலையைத் தனது 12 வருட அதிபர் சேவையின் மூலம் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர். கல்விப் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு அயராது பாடுபட்டு வெற்றியும் கண்டார் திரு.ஜே.ஏ.தவநாயகம் அவர்கள். இவர் இப்பாடசாலையில் கற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை மேற்கொள்வதற்கு வலுவான அத்திவாரத்தை இக்கல்விச்சாலையின் மூலம் இட்டிருந்தார். இவரது காலத்தில் பாடசாலை கல்விச் செயற்பாடுகளில் மாத்திரமின்றி பௌதீக வள அபிவிருத்தியிலும் நிறைவு கண்டது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கடமையாற்றி தனது ஆளுமையை விருத்தி செய்து கொண்டவர். இப்பாடசாலையின் சமாந்தர வளர்ச்சிக்கு அவரது பண்புமிகு ஆளுமைப்பண்பு பெரிதும் உதவியது. கல்வித் திணைக்களத்துடன் எப்போதும் நல்லுறவைப் பேணி வந்தார். இப்பாடசாலையின் மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினர்.

யாழ்.கல்வி வலயத்தில் சேவைக்கால ஆசிரியராக பணியாற்றியமை அவரது ஆற்றலை மேலும் உயர்த்தியது. அவர்களது ஓய்வுக்காலம் அவர்தம் குடும்பத்தினருடன் மகிழ்வாகக் கழிய எனது வாழ்த்துக்கள்.

**ந.தெய்வேந்திரராஜா**
வலயக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வுநிலை) யாழ்.வலயம்.



### ஆளுமைமிக்க அதிபராய்...

இயற்கை எழில் நிறைந்த, வாதரவத்தை கிராமத்தின் அறிவுச் சுடர் பரப்பும் யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் ஆற்றல் மிகு அதிபர்கள் வரிசையில், அதிபராக கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக, அரும்பணியாற்றி, தன் செயற்திறன் மிக்க ஆளுமையால் முதன்மை பெறும் திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

கல்விப்புலத்தில் ஆசிரியராக, சேவைக்கால கல்வி ஆலோசகராக, அதிபராக முப்பத்தாறு ஆண்டுகள் தனது தன்னலமற்ற சேவையினை சமூக நோக்குடனும் பற்றுறுதியுடனும் செவ்வனே நிறைவேற்றி அனைத்துத் தரப்பினரதும் நன்மதிப்பைப் பெற்ற நல்ல குருநாதர் நமது மணிவிழா நாயகனவார். "நல்லாசிரியரே நல்லதிபராகவும் பரிணமிக்க முடியும்" என்ற எழுதாமறை இவரது சேவைக்காலத்திலும் நிருபணமாகியுள்ளமை கண்கூடு.

இவர் சேவை ஓய்வுக்காலத்தில் கல்விச் சமூகத்துடன் இணைந்து செயற்படவும் தனது குடும்ப உறவுகளுடன் மகிழ்ந்திருக்கவும் இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

**யோகசாமி ரவீந்திரன்**
ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.



### பல்துறை ஆற்றல்மிகு பண்பாளன்

காலத்தினால் அழியாத கல்விப்பணிகளை சமூகத்திற்கு வழங்கிய திரு.J.A. தவநாயகம் அவர்களின் மணி விழாக்காணும் பேறு கிட்டியுள்ள இவ் வேளையில் அவரது மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கல்விப் புலத்தில் குறிப்பாக யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் J.A.தவநாயகத்தை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

J.A.தவநாயகம் அவர்கள் தனது தொழில் முறை வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை என்பவற்றில் வெற்றிகள் கண்ட ஒருவர். இவற்றுக்கெல்லாம் காரணமாக அவரது தன்னடக்கம், அமைதி, நேர்மை, புரிந்துணர்வு போன்றவை துணை நின்றன.

சிறந்து கல்வியியலாளன், சமூக அக்கறையாளன், நற்பண்பாளன் எனப் பல வகையிலும் தனது ஆளுமைப் பண்புகளைக் கொண்டு சிறந்து விளங்கும் J.A.தவநாயகம் அவர்கள் மேலும் பல சிறப்புக்களைப்பெற்று நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, மணி விழாமலர் சிறப்புற மலர எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த.இராசலிங்கம்**
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.



### பௌதீகவளக் கட்டமைப்பாளன்

இன்றைய தினம் மணிவிழாக் காணும் யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்பை எண்ணிப் பெருமையடைகிறேன். சவால் நிறைந்த துறையாக மாறிவரும் கல்வித் துறையில் பாடசாலையின் அதிபராகப் பணிபுரிவதென்பது கடினமானதொரு பணியாகும். அதிலும் போக்குவரத்து வசதி குறைந்ததும், அண்மைக்காலம் வரை மின்சார வசதி அற்றதுமான கிராமப்புறப் பாடசாலையொன்றில் பணி புரிந்து ஓய்வு நிலையை அடைந்திருக்கும் திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்களை பாராட்டியே ஆக வேண்டும். இப்பாடசாலையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கல்வி அடைவு முன்னேற்றத்திற்காகவும் பௌதீகவள விருத்திக்காகவும் உழைத்தவர். பிரபல பாடசாலைகள் மற்றும் முன்னணிப் பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அதே வசதி வாய்ப்புக்கள் தனது பாடசாலைப் பிள்ளைகளும் பெறக்கூடிய வகையில் அப் பாடசாலையின் பௌதீக வசதிகளை ஏற்படுத்தி கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நிறைவேற்றினார். மேலும் கோப்பாய் கோட்ட அதிபர் சங்கத்தில் பெறுப்பான பதவிகள் மூலம் சங்கத்தின் செயற்பாட்டிற்கு பக்கபலமாக இருந்தமையையும் நாம் மறக்கற்பாலது. யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் அவர்கள் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**திரு. ச.வேலழகன்-தலைவர்**
அதிபர்கள் சங்கம், கோப்பாய்க் கல்விக் கோட்டம்.



### பாடசாலையை செவ்வனே நெறிப்படுத்தியவர்

இனக் குழுமம் ஒன்றின் அடையாளத்தை உலகிற்கு எடுத்து இயம்பும் ஆற்றல் கல்விப்புலத்திற்கே அதிகமாக உள்ளது. எமது கிராமத்தின் ஆற்றலுக்கானதும் அடையாளப்படுத்தலுக்கானதுமான வெளிப்பாட்டை எமது பாடசாலையே கட்டமைத்தது எனலாம். கிராமத்தின் மீதான பாடசாலையின் பங்கும் பற்றுதலும் பாடசாலையில் பணிபுரிந்த அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் ஆரோக்கியமான செயற்பாட்டையே எடுத்துரைக்கின்றது. குறிப்பாக எமது பாடசாலையின் கடந்த பன்னிரண்டு வருடங்களும் முதல்வராக சேவையாற்றி 31.12.2021 அன்றுடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கின்ற திரு.யோசேப்பு அன்ரனி தவநாயகம் ஐயா அவர்கள் பாடசாலையின் கல்வித்தரம், பெறுபேற்றுத்தரம், இதர பௌதீக வளங்கள், விளையாட்டு அடைவுகள் என அனைத்துத் துறைசார்ந்த பாடசாலையின் மனப்பதிவை பிறர் சிலாகித்துக் கொள்ளும் அளவிற்கு வளர்முக மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றார். மணிவிழா கண்டு ஓய்வுபெறும் அவரின் ஓய்வுக்காலம் மனத்திருப்தியுடனும் ஆரோக்கியத்துடனும் அமைய வேண்டுமென இறைவனை வேண்டுவதுடன் எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யோ.யகேன்**
ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. செயலாளர்
பழைய மாணவர் சங்கம், வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்சிமாட்டின்
# இனிய புதுவருட வாழ்த்துக்கள்

Happy new Year

2022






இலவச நீர் பரிசோதனையுடனும், மிகக் குறைந்த விலையிலும்,
அதிகபட்ச உத்தரவாதத்துடனும், எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்,
24 மணித்தியாலத்தினுள் முறைப்பாடு திருத்திக்கொடுத்தல்.

(C-3383)

**YARL SMART** *Water Solution (Pvt) Ltd.*
No.341 K.K.S Road, Jaffna.
Karadippoku Junchtion Jaffna Road, Kilinochchi.
021 430 0044 | 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

# Yarl Smart PARTY
"happy home, happy life"




Surprise
Gifts & Dancing



**SMART PARTY**
"happy home, happy life"
No. 319, KKS Road, Jaffna
TP:- 021 430 0045 | 076 919 9989


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)


அழகான எம் வாழ்க்கையில்
அன்றொரு நாள் இருள் சூழ்ந்த நாள்
அன்பான அப்பாவை
ஆண்டவன் அழைத்த நாள்
உலகம் எவ்வளவு மாறி விட்டது
உங்களைத்தான் காணவில்லை.
உயரிய சபையில் நாம்
உயர்ந்து நிற்க உறுதுணையாக
இருங்கள் அப்பா...

பிள்ளைகள் : பவதாரணி (மகள்), பிரணவன் (மகன்), பவித்திரா (மகள்)
தகவல் : திருமதி விஜயகலா மகேஸ்வரன்

இல.32,36ஆவது ஒழுங்கை, கொழும்பு-06. தொலைபேசி: 2360679
இல.276, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2221 877

(9342)

# ஓராண்டு நினைவலைகள்



## பிரான்சிஸ் வின்சென் டீ போல்

பிறப்பு 03.04.1938 இறப்பு 01.01.2021

அன்பின் இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்

பிறந்த மண்ணின் பெருமைதனை
எடுத்தியம்ப மலர்ந்த பூ
நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடிவிட்டது
ஓடவில்லை உம் நினைவுகள் இன்னும்

ஆலமரமாய் நீர் இருந்து
நவரத்தினங்கள் பெற்றெடுத்து
நெஞ்சார நேசித்து வளர்த்து
எம் மனங்களில் வாழ்கின்ற எங்கள் அப்பாவே

உம் பணியில் உம்மிடத்தே
பலபேரை ஒற்றினைத்தாய்
பள்ளி மாணவர்கள் திறமைக்கும்
கதவுகள் திறந்து வைத்தாய்

சமயம் சார் விடயங்களில்
பற்றுடன் சேவை செய்தாய்
அரசியலிலும் கால்பதித்து
சமூகப் பணிகள் பல செய்தாய்

ஓவியமாய் பதிந்திருக்கிறது உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்து உம்மை காலமெல்லாம்
நினைத்திருப்போம்
ஆண்டவரின் காலடியில் உங்கள் ஆன்மா
இளைப்பாற
தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(9340)

"றோஸ் கொட்" கடற்கரை வீதி,
முனை, பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(9340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில், மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேர்த்திருவிழா சிறப்பு மலர் 01.01.2022

## ஆசிச் செய்தி



அசாத்யம் சாதகஸ்வாமின் அசாத்யம் தவகிம்வத
ராமதூத க்ருபாஸிந்தோ மத் கார்யம் சாதயப்ரபோ.


ஆஞ்சநேயன் அடியார்களே...

இன்று இணுவில் மருதனார்மட சுந்தரஆஞ்சநேயர் தேரேறி வருகின்றார். வருடா வருடம் மார்கழி மூலநட்சத்திர ஹனுமத்ஜெயந்தியின் முதல்நாள் இரதோற்சவம் சிறப்புற நடைபெறுவது இவ்வாலய தனிச்சிறப்பாகும். அவ்வகையில் இவ்வருடமும் சிறப்பான ஒழுங்கமைவுகளுடன் ஈழமண்ணில் புகழ்பூத்த விஷேட மங்கள வாத்திய கலைஞர்களின் பங்கேற்புடன் திரட்சிமிகு பக்த அடியார்களின் பக்திப்பெருக்குடன் பக்தர்களின் பாவம் தீர்க்க பஞ்சமுக ஆஞ்சநேயர் இரதமேறி பவனிவர இருக்கின்றார்.

ஆஞ்சநேய வழிபாடு எம் இந்துமதத்தில் தனித்துவமானது. சகல சௌபாக்கியங்களையும் பெற்றுத்தரும் சம்பூர்ணவழிபாடு என்பது இதன் தனிச்சிறப்பாகும்.

இன்றைய தினம் பக்திப்பெருக்குடன் நிகழும் எம் ஆஞ்சநேயர் ஆலயத்தின் இரதோற்சவப்பெருவிழாவில் கலந்து கொள்ளும் அடியவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் குறிப்பாக புலம்பெயர் பக்தர்களுக்கும் எல்லாம் வல்ல சுந்தர ஆஞ்சநேயப்பெருமானின் திருவருள் வேண்டிபிரார்த்தித்து எனது ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**
**ஆசியுடன்..**
**கிரியாதத்வநிதி**
**சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்.**
**ஆதீனகர்த்தா**
**அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் திருக்கோவில்.**



## வாழ்த்துச் செய்தி



இன்றைய தினம் தேர் ஏறி வலம் வரும் ஆஞ்சநேயர் பெருமான் சகலருக்கும் இன்றைய புத்தாண்டில் சகல ஐஸ்வர்யங்களையும் வழங்க வேண்டும், அத்தோடு கொரோனா என்ற கொடிய நோயில் இருந்து அனைவரையும் பாதுகாத்து தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அனைவருக்கும் சகல செல்வங்களையும் மனம் நிறைந்த மகிழ்ச்சியையும் வழங்கி அருள் பாளிக்க வேண்டும் என எல்லாம் வல்ல ஆஞ்சநேய பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**கோவிந்தபிள்ளை சிறீவரதன்**
**உதவிப் பொது முகாமையாளர்**
**வடக்கு கிழக்கு மாகாணம்**
**அலியான்ஸ் லைவ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்**

**மலரமைப்பு**
**எஸ்.ஞானேஸ்வரன்**
**Business Distribution manager**
**Allianz Insurance**

## துன்பம் களைந்திட வடம் பிடித்திழுப்போம்



மருதனார் மடத்தில் இருந்து மக்களுக்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயப் பெருமானின் இரதோற்சவம் சிறப்புற அமைய இறையருளை வேண்டி ஆசிர் வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

அண்ட சராசரம் முழுவதும் நிறைந்திருக்கும் காற்றுப் போல உலகம் முழுவதையும் தன் சக்தியால் தாங்கி நிற்கும் ஆஞ்ச நேயப் பெருமானை வணங்கி எமது துன்ப துயங்களை இல்லாதொழிப்போமாக. இன்றைய இந்த சிறப்பான இரதோற்சவ நாளில் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் இரதோற்சவ வடம் பிடித்திழுத்து தீமைகள் களைத்து நன்மை பெற்றுய்வோமாக.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள் இரண்டாவது குருமகா**
**சந்நிதானம், நல்லை ஆதினம்**



## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் இணுவில் மருதனார் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் 2001 தைத்திங்களில் குட முழுக்கு நடைபெற்று ஆஞ்சநேயப் பெருமானின் அருளாலும் இறை அருள் பெற்ற வினாசித் தம்பி ஐயா அவர்களின் நல்லாசியும் ஆதின கர்த்தாவின் அருள் நிறைந்த தவிப்பாலும் வளர்பிறையென ஆலயம் வளாச்சியுற்று மாமலைக் கோயிலின் முன்னால் கோபுரம் மலை என எழுந்து நிற்க சஞ்சீவி மடம் அருட் சிறப்பாய் அமைய பஞ்சமுக ஆஞ்சநேயர் தேடி வர வசந்த மண்டபம் சிறப்பாய் அமைய வீதி சுற்றி வழிபட காணி சேர பஞ்சமுகர் வீதியுலா வர சித்திரதேர் அமைய விஸ்வரூப ஆஞ்சநேயர் சிறப்பாய் அமைய சுற்று மதில்களோடு ஆலயம் சிறப்பாய் மிளிர 2013 இரண்டாவது குடமுழுக்கோடு நிறைவாக ஆலயம் அருட் சிறப்போடு விளங்கி 01.01.2022 இல் பஞ்ச முகர் தேரேறி வருகின்றார் என்றால் அனுமந்தன் ரோரருளும் ஆசியுமே சான்றாகும்.

இந்த நாட்டிலேயே மட்டுமல்ல சுவிஸ், கனடா, ஜேர்மன், அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா, நோர்வே, கொலன்ட் போன்ற அந்நிய தேசத்திலிருந்து ஆலயத்தின் வளாச்சியிலும் சமூகப் பணியிலும் உபயத்தை ஏற்று செய்வதில் நிகரற்றவர்களாகத் திகழ்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| 01.01.2022 | சனிக்கிழமை (இன்று) | |
| | காலை 7.00 மணி | தேர்பவனி |
| | மாலை 4.30 மணி | பிராய்ச்சித்த அபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை |
| 02.01.2022 | ஞாயிற்றுக்கிழமை ஹனுமத் ஜெயந்தி | |
| | காலை 5.00 மணி | சங்கல்ப்பம் |
| | பகல் 9.00 மணி | 108 கலச அபிஷேகம் |
| | மதியம் 9.30 மணி | ஆன்மீக உரை |
| | மதியம் 10.30 மணி | சந்தன அலங்கார பூஜை, பிரசாதம் வழங்கல் |

(C-3387)


என்றும் முதற்தர நகைகளுக்கு
New V.M.K. ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
No.80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP:- 021 720 1117, 077 784 9369
V.M.K. ஜுவல்லறி, கண்டி வீதி, சாவகச்சேரி.
021 227 1616

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 225 292
071 4546 960

Thiveya Cellular Centre
No 382, K.K.S Road, Maruthanarmadam, Chunnagam.
T.P: 077 474 5691
Phone, computer parts sales & Repairing Service, All Phones card & Sim others Distributers

STS TRAVELS & TOURS
A/C & Non A/C Bus
A/C & Non A/C Van
Airport Dropping
Local Hire
All Celyon Tour Service
Tel: 077 205 6400
AMPALAVANAR ROAD, UDUVIL CHUNNAKAM
Call for booking: T.HARAPRIYAN (DAYA)
Hari Bol Square
Wedding House, Travel & Tourism, Luxury Family Rooms, 24 Hrs Security, Rooms Available, A/C & Non A/C, Wifi, Parking, Wedding House wedding Hall
Tel: 077 914 4520, 021 321 2863 No.342, K.K.S. Road, Maruthanarmadam.

N MOBILE
Dealers in Wholesale & Retail
Mobile Phone, Accessories & Repairing
No.11, (Up Stairs) New Market, Hospital Road, Jaffna.
:021 222 0875
N COLLECTION
Palaly Road
Thirunelvely Junction
076 306 3306

சிறி சிவராம் ரேடர்ஸ்
SRI SIVARAM TRADERS
248, Hospital Road, Jaffna
189, Katheresan Street, Colombo.
T.P: 0777560760
Tel: 0777560760 0773076917 021 2228629

அனைத்து விதமான வயறிங், பிளமிங், எலக்ரிக்கல் பொருட்களையும் பெற்றிட
NEW LUCKY HARDWARE
Kandy Road, Ariyalai, Jaffna.
021 222 2299

கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
KEERTHIKA TEXTILES
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ் & பேபி நீட்ஸ்
K.T. பெசன்
T.P: 077 228 8245

Vene Transport
J.C.B Backhoe Loader
T.P: 021 222 2046
077 908 2146
165, K.K.S Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம் மும்பையில் பாதுகாப்பு அதிகரிப்பு

(டில்லி)

தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்படும் என்ற எச்சரிக்கையை தொடர்ந்து மும்பையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டுக் கொண்டாட்டத்தை சீர்குலைக்கும் வகையில் காலிஸ்தான் ஆதரவுடன் பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.



இதனையடுத்து மும்பையில் உள்ள ரயில் நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், மக்கள் கூடும் இடங்களில் பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

அதேநேரம் மும்பையில் ஒமிக்ரோன் தொற்று பரவலை முன்னிட்டு 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பச்சை குத்திய நிலையில் செய்தியை தொகுத்தளித்த உலகின் முதல் பழங்குடியின பெண்



(வெலிங்டன்)

முதல் தடவையாக நியூசிலாந்தின் மௌவ்ரி பழங்குடியினச் செய்தியாளர் ஒருவர், தமது பாரம்பரிய முக அடையாளங்களுடன் நியூசிலாந்தின் தேசிய தொலைக்காட்சியில் பிரதான செய்தி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியுள்ளார்.

ஓரினி கைபாரா என்ற இந்தச் செய்தியாளர், தனது செய்தியை தொகுத்து வழங்கி உலகில் முதல் தடவையாக பாரம்பரிய முக அடையாளங்களுடன் செய்தியை தொகுத்து வழங்கியவர் என்ற பெருமையை ஏற்படுத்தியுள்ளார்.

இதனை பலரும் மௌவ்ரி பழங்குடியினத்தின் பிரதிநிதித்துவத்திற்கான வெற்றி என்று பாராட்டியுள்ளனர்.

நியூசிலாந்தில் உள்ள பழங்குடியின மக்களான மௌவ்ரி மக்களின் பாரம்பரியத்தில், பெண்களுக்கு முக அடையாளங்களாக கன்னங்களில் பச்சை குத்தப்படுகின்றன. இது "மோகோ" என்று அழைக்கப்படுகிறது. (நி)

## அவுஸ்திரேலியாவில்

# பழைய பாராளுமன்றிற்கு தீ வைத்த போராட்டக்காரர்கள்

(கன்பரா)

அவுஸ்திரேலியா நாட்டில் பழங்குடியினரின் இறையாண்மைக்காகப் போராடிய போராட்டக்காரர்கள் பழைய பாராளுமன்ற கட்டடத்துக்கு தீ வைத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவுஸ்திரேலியா கன்பரா நகரில் நேற்று முன்தினம் நடந்த போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் அங்குள்ள பழைய பாராளுமன்றக் கட்டடத்துக்கு தீ வைத்துள்ளனர்.

இதில் அந்த கட்டடத்தின் முன் கதவுகள் தீப்பற்றி எரிந்தன. இந்த தீ வைப்பு சம்பவத்தை தொடர்ந்து அந்த கட்டடத்துக்குள் இருந்த தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

பழைய பாராளுமன்ற கட்டடத்துக்கு தீ வைத்த சம்பவத்துக்கு பிரதமர் ஸ்காட் மோரீசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறும் போது, "அவுஸ்திரேலியா இப்படி செயற்படுவதில்லை. இந்த நாட்டின் ஜனநாயக சின்னத்தை அவுஸ்திரேலியர்கள் வந்து தீயிட்டு கொளுத்துவதை பார்க்கும் நடத்தை எனக்கு வெறுப்பை ஏற்படுத்துகிறது. திகைத்துப்போய் நிற்கிறேன்" என் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடம் தாக்கப்பட்டதை அரசு தரப்பு எம்.பிக்கள் கடுமையாக சாடினர். இது ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என அவர்கள் குறிப்பிட்டனர். (நி-5)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2483

**ராயு**

அடேங்கப்பா... இதுக்கு முந்தின வருசங்கள்ல செழிப்பா வாழ்ந்து கிழிச்சிட்டாரு...
2021 தான் இவர நடுத்தெருவுல கொண்டாந்து விட்டுருச்சாம்



**நிரூப்**

நாம் புது வருசம் கொண்டாடும் போது




அப்புறம் அந்த வருசம் நம்மளை கொண்டாடும் போது



**அமீர்**

வாழ்க்கைல நாம இந்த பக்கமா ஒரு பிரச்சரனையை சுருட்டி முடிச்சா



இன்னொரு பிரச்சினை நமக்கு பின்னாடியே சுத்தி சுத்தி வருது

**சஞ்ஜெய்**

உங்கிட்ட கேட்குறது எல்லாம் ஒன்னே ஒன்னு தான்




2021 எவ்ளவோ பரவாயில்லைன்னு மட்டும் சொல்ல வச்சுறாதே

**வருண்**

எவ்வளவு சோகமா இருந்தாலும் கரெக்ட் டைமுக்கு பசிக்குது



என்ன மானங்கெட்ட வயிறோ

**இமான்**

அங்க ஒருத்தன் XL-100 இல் வாறான் குறுக்க cross பண்ணட்டும்



XL இல் 30k/m speed இல் தான் வருவானுகள் நாம குறுக்க cross பண்ணாலும் சின்ன காயத்தோட தப்பிச்சுருவானுங்க
wait பண்ணுவோம் எவனாவது கெத்துன்னு சொல்லிட்டு 80km/m speed இல் வருவான் அப்போ cross பண்ணி அவன் சோலிய முடிப்போம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பளப் பிரச்சினைக்கான சுற்றுநிருபம் இதுவரை வெளியிடப்படவில்லை

## தொடர் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக ஆசிரியர்–அதிபர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, ஜனவரி மாதத்தில் சம்பளம் அதிகரிக்கப்படாவிட்டால் தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர் - அதிபர் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் இவ்வாறு தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அந்த சங்கம் அறிவித்துள்ளது.

சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சுற்றுநிருபம் இதுவரை வெளியிடப்படவில்லையெனவும் குறித்த சுற்றுநிருபம் எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் வெளியிடப்பட வேண்டும் எனவும் இலங்கை ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார். (நி-5)

# உலகை அச்சுறுத்தும் ஒமிக்ரோன்

## இலங்கையில் அதிகரித்த தொற்றாளர்கள்

(கொழும்பு)

**உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனாவின் புதிய திரிபான ஒமிக்ரோன் வைரஸினால் பாதிக்கப்பட்ட புதிய தொற்றாளர்கள் 41 பேர் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**



இந்த விடயத்தினை ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இதனால் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மொத்த ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்வடைந்துள்ளது. (நி-5)

# அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதிக்காக இரு நாடுகளிடம் கடன் கோரும் அரசாங்கம்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் கடன் தொகைகள் கோரப்பட்டுள்ளன.

வர்த்தக விவகார அமைச்சர் பந்துல குணவர்தன இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இரண்டு நாடுகளினதும் உயர்ஸ்தானிகராலயங்களின் ஊடாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடன் பெறுவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக விவகார அமைச்சின் செயலாளர் பத்ரானி ஜயவர்தன உறுதிப்படுத்தினார்.

இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்தால் கடன் அடிப்படையில் குறித்த நாடுகளிடமிருந்து அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார்.

அரிசி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடமிருந்தே அதிகம் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# புகைப்பிடிப்பவர்களை கண்டறிவதற்கு புதிய செயலி அறிமுகம்

(கொழும்பு)

பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்களைக் கண்டறிவதற்காக புதிய செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து குறித்த செயலியை அறிமுகப்படுத்தியுள்ளன.

குறித்த செயலியைத் தரவிறக்கம் செய்வதன் ஊடாக பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்கள் தொடர்பில் எந்தவொரு நபருக்கும் தகவல் வழங்க முடியும்.

இதேவேளை, எதிர்கால த்தில் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்தார். (நி-5)

# மடக்கிப் பிடிக்கப்பட்ட மலைப்பாம்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதின்னான்கு அடி நீளமான மலைப்பாம்பொன்று பிரதேச மக்களினால் நேற்று முன்தினம் அதிகாலை மடக்கிப் பிடித்துள்ளதாக கந்தளாய் பிராந்திய வனஜீவராசி அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பாம்பினை யால வனப் பகுதியில் விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (நி-5)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ரைக்கோடர்

நம்மைப் பற்றிய விடயங்களை, விமர்சனங்களை, இரகசியங்களை வெளியிட நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால் மற்றவர்கள் சம்பந்தப்பட்டவற்றை வெளியிடுவது தவறு என்று ஏனோ பலருக்குப் புரியமாட்டேன் என்கிறது.

சிலரால் மற்றவர்களைப் பற்றிய உண்மைகளை வெளியிடாமல் இருக்க முடியாது. உடம்பில் ஏற்படும் கோளாறு ஏதவிதத்திலாவது தன் ரூபத்தை வெளிக்காண்பிப்பது போல, இவர்கள் அவற்றைக் கொட்டித் தீர்க்காவிட்டால், மண்டையே வெடித்துவிடும் போலும்.

ஓட்டை வாய் என்றும், லொட லொட என்றும், டி.எம்.எஸ்.என்றும், அதிகப் பிரசங்கி என்றும், வத்திப் வட்டி என்றும் பலவகையாலும் சமுதாயத்தினரால் குறிப்பிடப்படும் இவர்கள் யாருடைய அன்புக்கும் எந்தக் காலத்திலும் பாத்திரமாக மாட்டார்கள்.

சுவாரஸ்யமான விடயம் என்பதற்காகவே ஓர் இரகசியத்தை உடைக்க வேண்டுமென்பதில்லை. பொதுவான விடயங்களைப் பேசியே சுவாரஸ்யத்தை உண்டாக்க முடியும்.

சிலர் அறிய ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அது எப்படியும் மற்றவர்கள் மூலம் வெளிவரத்தானே போகிறது என்பதற்காக, அது நம் மூலமாக வெளிவர வேண்டுமென்பதில்லை.

ஒரு சிலர் தங்களைப் பற்றிய உண்மைகளை மனம் திறந்து பேச விரும்புகிறார்கள், அதன் மூலமாகத் தங்களது மனப்பாரம் குறைவதாக நம்புகிறார்கள். பிரச்சினைகளுக்கு விடிவு காண எண்ணுகிறார்கள். இத்தகைய விடயங்களைப் பேசக் கூடிய ஒருவரைத் தான் அவர்கள் மிகவும் விரும்புகிறார்கள். மாறாக சொன்னதை மற்றவர்களிடம் சொல்லிவிடும் கிளிப்பிள்ளைகளை அவர்கள் விரும்புவதில்லை.

ஒருவர் மனம் திறந்து பேச, அதை ஊரெல்லாம் தம்பட்டம் அடிப்பது என்பது தரக்குறைவான செயல், அது முழுமையான நம்பிக்கைத் துரோகமும் ஆகும்.

கத்தோலிக்கக் கிறிஸ்தவரிடம் ஒரு நம்பிக்கை உண்டு. ஒருவன், தான் செய்த பாவங்களை யெல்லாம் உரிய பாதிரியார் ஒருவரிடம் மனம் வருந்திச் சொல்லிப் பாவமன்னிப்பு பெறுவான். அப் பாதிரி யாருக்கும் அவனுக்கும் மட்டுமே நடந்தவை தெரியும்.

அப்பாதிரியார் எக்காரணம் கொண்டும் அவன் சொன்ன உண்மைகளை வெளியிடமாட்டார். அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும் சுட, தன் மனச்சாட்சிக்கு, விரோதமில்லாத வகையில் ஒரு சராசரி மனிதன் நடந்து, கொள்வானேயானால் அவன் அனைவராலும் விரும்பப்படுகிற நபராக இருப்பான்.

தப்பித் தவறி எவரேனும் வலியக் கிளறினாலும் என்னால் உண்மையைச் சொல்ல இயலாது; அதே நேரத்தில் என்னைப் பொய் சொல்லத் தூண்டாதீர்கள், என்று தெளிவாகச் சொல்லிவிட வேண்டும்.

அப்படியே சொல்ல நேரிட்டாலும், அதனால் இரு உள்ளங்கள் இணையக் கூடியதாக இருக்க வேண்டும். உண்மைகள் வெளிவந்தால், அவை பயனுள்ள வகையில் அமைய வேண்டுமே ஒழிய, பகையை வளர்க்கும் பண்பற்ற செயலாக இருக்கக் கூடாது.

நாம் நட்புக்கு உகந்தவர்கள், நல்லுறவுக்கு வித்திடுபவர்கள் என்ற நம்பிக்கையும், நம்மைச் சுற்றியுள்ளவர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இது முடிந்தால் மற்றவர்கள் நம்மை மிகவும் விரும்பத் தொடங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு சிகரெட் விற்க தடை

(கொழும்பு)

சிகரெட் உட்பட புகையிலை தயாரிப்புகளை விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான வயதெல்லை அடுத்த ஆண்டு முதல் 21 வயதில் இருந்து 24 வயதாக அதிகரிக்கப்படுகிறது என புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான அதிகார சபை சட்டத்தில் 2022 ஆம் ஆண்டு திருத்தங்களை செய்ய தீர்மானித்துள்ளதால், இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு அமைய புகையிலையை பிரசாரம் செய்தல், பயன்படுத்துதலை ஊக்குவித்தல், அனுசரணை வழங்குதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. புகையிலை தயாரிப்புகளை சமூக ஊடகங்கள் வாயிலாக பிரசாரம் செய்வதை புதிய சட்டத்தின் கீழ் தடை செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

இதனைத் தவிர சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ள புகையிலை தயாரிப்புகள் சம்பந்தமான அனைத்து விளம்பரங்களையும் நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# புத்தாண்டை கொண்டாடும் கூகுள்




புத்தாண்டு தினத்தையொட்டி கூகுள் வண்ணமயமான டூடுல் சித்திர வேலைப்பாடுகளுடன் வருவது புதிதல்ல என்றாலும் தற்போது புத்தாண்டு கொண்டாட்டங்களில் கூகுள் கொஞ்சம் கூடுதல் சிறப்பை சேர்த்துள்ளது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## துன்பங்களை போக்கி மங்கலம் தரும் ராம நவமி



ஸ்ரீராமன் பிறந்த தினத்தோடு முடியும் பத்து நாட்கள் முன்பத்து எனப்படும். பிறந்த தினத்தில் இருந்து கொண்டாடப்படும் பின் பத்து நாட்கள் பின்பத்து எனப்படும். பல வைணவ ஆலயங்களில் முன்பத்து, பின்பத்து என சிறப் பாக விழா கொண்டாடுவர். ராமா யணம் படிப்பதும் சொற்பொழிவுகை செய்வதும் உண்டு. ஆஞ்ச நேயர் உற்சவமும் செய்து மகிழ்வார்கள்.

### விசிறித்தானம்

ஸ்ரீ ராம நவமியன்று விசிறிகளை பிறருக்கு தானமாக வழங்குகின்றனர். ஸ்ரீராமருக்கு எல்லோரும் சேவை செய்ய வேண்டும் என்பதற்கு அடையாளமாக தான் விசிறி வழங்கப்படுகிறது. மேலும் ஸ்ரீராமநவமியன்று பானகம், நீர்மோர், வடை, பருப்பு போன்றவற்றையும் கொடுப்பதுண்டு. ஸ்ரீராமர் மகரிஷி விஸ்வமித்திரரோடு சென்றபோதும் 14 ஆண்டுகள் வனவாசம் செய்த காலத்திலும் வெயிலில் அலைந்து கஷ்டப்பட்டார். அவர் பிறந்ததோ சித்திரை மாதம் கோடைக்காலத்தில் இதனால் ஸ்ரீராமரை பார்க்க வந்தவர்களுக்கு எல்லாம் அவரது தந்தை தசரதர் முதலில் நிர்மோரும் பானகமும் கொடுத்து உபசரித்தார். கூடவே விசிறியும் கொடுத்தார். இதனால் ராம நவமியன்று இவற்றை பிறருக்கு கொடுக்கும் வழக்கம் உருவானது. மேலும் பக்தர்கள் அன்று தங்கள் சக்திக்கு ஏற்றப்படி பொன், வெள்ளி, செம்பு முதலியவற்றால் வடிக்கப்பட்ட ஸ்ரீராமர் சிலையை ஒருவருக்கு தானமாக வழங்கலாம்

### வழிபடும் முறை

ராமநவமியன்று அதிகாலையில் குளித்துவிட்டு வீட்டை தூய்மைப் படுத்த வேண்டும். பூஜை அறையில் ராமர் படத்தை நன்றாக சுத்தம் செய்து குங்குமம், சந்தனம் போன்றவற்றால் பொட்டிட்டு துளசிமாலை அணிவிக்க வேண்டும். பின்னர் பழம், வெற்றிலை, பூ இவைகளை வைத்து ஸ்ரீராம நாமத்தை சொல்லி அர்ச்சனை செய்ய வேண்டும். சாதம், பாயசம், பானகம், வடை, நீர்மோர், தேங்காய், பஞ்சாமிர்தம், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு இவற்றை நைவேத்தியமாக படைக்கலாம். அன்று உண்ணாமல் விரதம் இருக்க வேண்டும்.

ராமரை பற்றிய நூல்களை படித்தும் பாராயணம் செய்வதுமாக இருக்க வேண்டும் அன்று ஸ்ரீராமர் கோவில்களில் நடைபெறும் பட்டாபிஷேகத்தை கண்டு களிக்கலாம். அர்ச்சனை முடிந்த பின் நைவேந்தியமாக சர்க்கரைப் பொஙற்கலை குழந்தைகளுக்க கொடுக்க வேண்டும். காலையில் உணவு எதுவும் சாப்பிடாமல் ஸ்ரீராமநவமி விரதம் இருந்து ஸ்ரீராமபிராணை வணங்கி வழிபடுபவர்களுக்கு ஆஞ்சநேயரின் அருட்பார்வை கிட்டும். இதனால் குடும்பத்தை விட்டு பிரிந்தவர்கள் ஒன்று சேருவார்கள். ஸ்ரீராமஜெயம் என்ற எழுத்தை 108 முறை, 1008 முறை எழுதத் தொடங்கலாம். ஸ்ரீராம என்ற நாமத்தை மூன்று முறை அடுத்தடுத்தவாறு உச்சரிக்க வேண்டும். இந்த பேராற்றம் வாய்ந்த மந்திரர்தால் ஆணவம் அழியும் மனதில் அமைதியும் மகிழ்ச்சியும் விளையும்.

# செய்தித்துளிகள்

## மதுபான போத்தல்களில் பாதுகாப்பு ஸ்டிக்கர்

(கொழும்பு)

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்படும் மதுபானப் போத்தல்களில் பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுவது கட்டாயமாக்கப்படும் என மதுவரி திணைக்களம் விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபான விற்பனையை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## பதுளை மாவட்டத்தில் கொரோனாவால் 6 பேர் பலி

(பதுளை)

கொரோனா வைரஸ் தொற்றால் பதுளை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

பண்டாரவளையில் இருவர், வெலிமடையில் இருவர், ஹப்புத்தளையில் ஒருவர், பசறையில் ஒருவர் என்ற வகையில் அறுவர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (நி-5)

## குணமடைவு 181

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 181 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இனையடுத்து, கொரோனா தொற்றில் இருந்து இதுவரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 60 ஆயிரத்து 494 ஆக அதிகரித்துள்ளது. (4-5)




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 350 | 320 | 320 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 850 | 1000 | 900 |
| தக்காளி | 260 | 220 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 50 |
| கோவா | 320 | 300 | 340 | 400 |
| கரட் | 450 | 460 | 500 | 600 |
| பூசணி | 80 | 60 | 60 | 100 |
| புடோல் | 320 | 250 | 220 | 300 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 240 | 230 | 150-250 | 320 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 180-250 | 200 |
| பாகற்காய் | 550 | 600 | 400 | 800 |
| வெண்டிக்காய் | 260 | 200 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 110 | 150 |
| பயற்றங்காய் | 350 | 450 | 350 | 300 |
| லீக்ஸ் | 320 | 340 | 340 | 400 |
| பீற்றூட் | — | — | — | — |
| கறிமிளகாய் | 650 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | — | 1200 | — |
| போஞ்சி | 280 | 300 | 360 | 320 |
| கத்தரிதம்புள்ள | 320 | 300 | — | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 120 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 280 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | — | — |
| முள்ளங்கி | 160 | 180 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 50 |
| வல்லாரை | 25 | 36 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## பண்ணையார்



கொள்ளக்குடி என்னும் கிராமத்தில் ஒரு பெரிய பண்ணையார் இருந்தார்.

பணம் நிறைய இருந்த அவரிடம் இரக்க குணம் சிறிதளவு கூட இல்லை. ஏழை எளிய விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைச்சல் சரியாக இல்லாத நேரங்களில், பண்ணையாரிடம் வட்டிக்கு கடன் வாங்கி, தங்கள் குடும்பத்தை நடத்தி வந்தனர்.

பண்ணையார் தன்னிடம் வட்டிக்கு கடன் வாங்கிய விவசாயிகளின் நிலத்தை, ஏதாவது ஒரு வழியில் ஏமாற்றி, தனக்கிருந்த நிலத்தோடு சேர்த்து வந்தான்.

அசலையும், வட்டியையும் குறித்த காலத்தில் செலுத்த முடியாத ஏழை விவசாயிகள் பண்ணையாரின் பிடியில் சிக்கித் தவித்தனர்.

பண்ணையாரின் மனைவி நல்ல உள்ளம் கொண்டவள். தன் கணவனின் செயல்கள் பிடிக்காமல், அடிக்கடி தன் கணவனை வார்த்தைகளால்கண்டித்து வந்தாள்.

அவள் தன் கணவனிடம், "ஏழைகள் தங்கள் வியர்வையை நிலத்தில் சிந்தி, அதில் கிடைக்கும் கூலி முழுவதையும் வட்டியாக வயிற்றெரிச்சலோடு கொடுக்கும் போது, அதை வாங்கி நம் பணப்பெட்டியில் போடுவது மிகப் பெரிய பாவம்.

நீங்கள் இதுநாள்வரை ஏழைகளின் வயிற்றெரிச்சலால் நிறைய பாவ மூட்டைகளை சேர்த்து விட்டீர்கள். இனி வரும் காலங்களிலாவது, ஏழை எளியோரின் கஷ்டங்களை புரிந்து கொண்டு வாழ கற்றுக் கொள்ளுங்கள்" என்று அடிக்கடி தன் கணவனுக்கு புத்திமதிகள் சொல்லி வந்தாள்.

மனைவி சொல்வதை காதில் வாங்காத பண்ணையார், தன் போக்கிலேயே வாழ்ந்து வந்தான்.

ஒரு ஏழை விவசாயியின் மனைவி பண்ணையாரிடம் கடன் வாங்கி, தன் மகளின் திருமணத்தை நடத்தினாள். வாங்கிய கடனுக்காக அசலையும், வட்டியையும் திருப்பித் தர முடியாமல் தவித்த அவள், பண்ணையாரிடம் சென்று தனக்கு கொஞ்ச நாட்கள் அவகாசம் தருமாறு கேட்டாள்.


பண்ணையார், விவசாயியின் மனைவியின் வார்த்தைகளுக்கு செவிசாய்க்கவில்லை. அவள் நிலத்தை தனதாக்கிக் கொண்டான்.

தலைமுறை தலைமுறையாக ஆண்டு அனுபவித்து வந்த நிலம் பறிபோனதால், துக்கத்தின்எல்லைக்கே சென்றுவிட்ட விவசாயியின் மனைவி தன் நிலத்தின் மீது படுத்து, உருண்டு அழுதாள். தன் நிலத்தை தனக்கு திருப்பித் தந்துவிடும்படி பண்ணையாரிடம் கெஞ்சினாள். பண்ணையார் நெஞ்சில் சிறிதும் ஈரமில்லாமல், விவசாயியின் மனைவியை விரட்டி விட்டான்.

(தொடரும்)

# மகாபாரதம்

290



பார்வதி- ஞானம் என்பது என்ன? வைராக்கியம் என்பது என்ன?

ஈஸ்வரன் -ஞானம் என்பது முக்திக்குரிய மார்க்கமாகும். சம்சாரம் என்னும் காட்டை ஞானம்என்னும்தீ சுட்டு எரித்து விடும். பொருட்களிடத்து பற்றற்ற மனநிலை கொண்டு சம்சாரத்தில் வெறுப்பு ஏற்படுத்தும் முயற்சியே ஞான நல்வழியாகும்.

முட்டாள்கள் ஆயிரம் காரணங்களைக் கற்பித்துக் கொண்டு துன்பம் அடைகிறார்கள். ஆனால் ஞானிகள் துன்பம் என்று எதையும் கருதுவதில்லை. சாதாரண மக்கள் வேண்டியது கிடைத்துவிட்டால் தலை கால் தெரியாமல் குதித்து மகிழ்ச்சி அடைகிறார்கள்.

துன்பம் வந்து விட்டாலோ சொல்லவே வேண்டியதில்லை. எல்லாமே தொலைந்தது என பதறுகிறார்கள். ஒரு இலை அசைந்தாலும் புயல் வந்தது போல பரிதவிக்கிறார்கள்.

மனிதப்பிறவியில் துன்பமும், இன்பமும் மாறி மாறி வருகின்றன. எந்தப் பொருளில் பற்று ஏற்படுகிறதோ அப்போது அதன் நிலையாமையை உணர்தல் வேண்டும். அழியப் போகிற ஒன்றின் மீது ஏன் இவ்வளவு [illegible] ஆழ்ந்து சிந்திக்கும் போது பற்றற்ற தன்மை தோன்றும். வைராக்கியம் தோன்றும்.

ஆழ்கடலில் வேறு வேறு மூலைகளில் கிடக்கும் நுகத்தடிகள் பல காலம் அலைந்து திரிந்து ஒன்று சேர்ந்து பிரிதல் போல உயிரும் உடலும் கலந்து பின் ஒரு கால கட்டத்தில் பிரிகின்றன.

பொருள்களின் உண்மைத்தன்மையை, நிலையாமையை அறிந்தவர்கள் அவற்றில் பற்றுக் கொள்ள மாட்டார்கள். நால்வகைக் கதிகளில் எந்தக்கதியாயினும்அதில் துன்பம் தான். அழியக் கூடிய, பிரியக்கூடிய அனைத்திலும் துன்பம் தான்.

பொருளைச் சேர்க்கும் போதும், துன்பம் காக்கும் போதும் துன்பம் இழக்கும் போதும் துன்பம். பொருள் ஆசை உள்ளவர்க்கு உலகில் உள்ள அனைத்துப்பொருட்களைக்கொண்டு வந்து கொட்டினாலும் அந்த ஆசை நிரம்பாது.

விரும்பியவை அனைத்தும் கிடைத்து விட்டால் இன்பம் கிடைக்குமா? எனில் அப்போதும் இன்பம் கிடைக்காது. மேலும்.. மேலும் ஆசை வளரும். ஆனால் ஆசையேஇல்லாத போதுதான் இன்பம் ஏற்படும். இது பொருள்கள் மீது கொள்ளும் வெறுப்பினால்.. வைராக்கியத்தால் ஏற்படும்.

பார்வதி-மூப்பையும் மரணத்தையும் விலக்கு வது எப்படி?

ஈஸ்வரன்-பிறப்பே இல்லாதிருக்குமாயின் முதுமை இல்லை. மரணமும்இல்லை. இதற்கு ஒரே வழி முக்தி ஒன்று தான். தானத்தாலோ, தவத்தாலோ,முதுமையை, மரணத்தைத்தடுக்க முடியாது. முக்தி பெற்ற உயிர் மீண்டும் பிறப்பதில்லை. பிறப்பில்லையெனில் மூப்பு முதலான வியாதிகளும் இல்லை, மரணமும்இல்லை (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மலர்கின்ற 2022 மகிழ்வைத் தரட்டும்!

இன்று 2022ஆம் ஆண்டின் முகிழ்ப்பு. இது ஆங்கில ஆண்டின் பிறப்பாக இருந்தாலும் நடைமுறையில் நிர்வாக ஆண்டாக இருப்பதால் பிறக்கின்ற புத்தாண்டை உலகம் முழுவதும் மகிழ்வோடு வரவேற்கின்றது.

இந்த வேளையில் பிறக்கின்ற புத்தாண்டில் மனித குலம் மகிழ்வோடு வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதோடு அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

அன்பிற்குரிய உறவுகளே! எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி அரிதினும் அரிது என்பர் ஞானிகள்.

உலகின் கண் உள்ள அனைத்து ஜீவராசிகளிலும் மனிதப் பிறவி உன்னதமானது. ஓரறிவு, ஈரறிவு என்றவாறு புல் பூண்டுகளையும் மரங்களையும் நுண்ணங்கிகளையும் பிற உயிர்களையும் அவற்றின் அறிவுசார் இயல்பிற்கேற்ப வகைப்படுத்திய மனிதன் ஆறறிவு படைத்தவன்.

ஐந்தறிவு விலங்குகளில் நின்றும் மனிதன் ஆறாவது அறிவால் உயர்வு பெறுகின்றான் எனும்போது, ஆறாவது அறிவான பகுத்தறிவு மனிதப் பிறப்பை கிடைத்தற்கரிய பிறவியாக ஆக்கியுள்ளது.

இங்கு பகுத்தறிவு என்பதற்கான விளக்கங்கள் பல்வகைப்பட்டதாக இருப்பினும் அன்பும் இரக்கமும் அதனூடு ஆன்மீகத்தையும் அடிப்படையாகக் கொண்டு மனிதன் பகுத்தறிவுடையவனாக ஆகின்றான்.

அத்தகு பகுத்தறிவுடையவனால் மட்டுமே பிற உயிர்களை நேசிக்கவும் தன் உயிர்போல் மன்னுயிரை போற்றவும் முடியும்.

இன்று உலகம் பேரவலத்தைச் சந்தித்து நிற்கிறது.

விடைபெற்றுச் சென்ற 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகள் கொரோனாப் பெருந்தொற்றைத் தந்து 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காவு கொண்டு விட்டது.

அறிவியலும் விஞ்ஞான வளர்ச்சியும் புதிய கண்டுபிடிப்புகளின் சாதனையும் கொண்ட சமகால மனித சமூகத்தை கொரோனாத் தொற்று எவ்வாறு பதம் பார்த்தது என்பதை நாம் கூறி யாரும் அறிய வேண்டிய தேவை இல்லை.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், யுத்த விமானங்கள், விண்வெளி ஆராய்ச்சிகள், செய்மதிகள் என்று உலகப் பிரபஞ்சத்தின் அடிமுடி தன்கைக்குள் என்று நினைத்த வல்லரசு நாடுகளே பெருந்தொற்றுக்குப் பலரைப் பலியாக்கி நிற்கிறது என்றால், விடைபெற்றுச் சென்ற 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகள் மனித குலத்துக்கு இறைவன் என்ற மெய்ப்பொருளை உணர்த்தி விட்டுச் சென்றிருக்கின்றன.

எனவே, எவ்வளவுதான் கோடானு கோடி செல்வத்தை சேர்த்து வைத்திருந்தாலும் அவை எதுவும் எங்களைக் காப்பாற்றமாட்டா.

மாறாக நாம் செய்கின்ற மக்கள் சேவையும் மற்றவர் மீது நாம் காட்டுகின்ற அன்பும் இரக்கமும் அறமுமே எங்களை இம்மையிலும் மறுமையிலும் காப்பாற்றும் என்ற உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

அந்த உண்மையை உணர்ந்து தன்உயிர் போல் மன்னுயிரைப் போற்றுகின்ற உயர் பண்பை பின்பற்றுவோமென, பிறந்துள்ள 2022 ஆம் ஆண்டில் சத்தியம் செய்வோம். அதன்படி வாழ்வோம். எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை.

# மலேரியா அற்ற நாடாக பேணுவதற்கு பாதுகாப்பு நடவடிக்கையை முன்னெடுப்போம்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையை மலேரியா அற்ற நாடாக தொடர்ந்தும் பேணுவதற்கான முற்காப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை 2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார நிறுவனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியாத்தொற்று பரவவில்லை. எனினும் கடந்த ஆண்டுகளில் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் மலேரியாத்தொற்றுடன் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

கடந்த சில வாரங்களில் மலேரியா தொற்றுடன் இருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களாவர்.

மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் வகை நுளம்புகள் பெருமளவாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. மேலும் அண்மைக்காலங்களாக நகர்ப்புற மலேரியாவை பரப்பக்கூடிய அனோபிலிஸ் ஸ்டெபென்சி வகை நுளம்புகளும் எமது பிரதேசங்களில் காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையானது மலேரியா நோயை ஏற்படுத்தும் பிளாஸ்மோடியம் வகை ஒட்டுண்ணிகளை மனித உடலிலிருந்தும் அதை காவிப் பரப்பும் நுளம்புகளில் இருந்தும் ஒழித்ததன் மூலமே மலேரியா அற்ற நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

எனவே காவிகள் பெருமளவாக காணப்படும் எமது பிரதேசத்தில் மலேரியா நோய்க்கான ஒட்டுண்ணியுடன் ஒருவர் இருந்தாலே அவ்விடத்தில் மலேரியா மீண்டும் விரைவாக பரவும் அபாயம் உள்ளது.

எனவே மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற நாடுகளுக்கு செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம்.

ஆபிரிக்க நாடுகள் மற்றும் இந்தியா செல்ல இருப்பவர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம் அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ (தொ.பே.இல 021 222 7924) தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் கைதான 43 இந்திய மீனவர்களை முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இவர்களுக்கான விளக்கமறியலை ஜனவரி 13 ஆம் திகதி வரை நீடிக்க ஊர்காவற்றுறை நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக்கு அருகே சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 02 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** விக்கிரமாராச்சி பிறைவேற் லிமிட்டெட், சுன்னாகம் டெலிகொம், ஈவினை, கந்தையா உபாத்தியார் சந்தி, கற்பகம் ஊரெழு, கொத்தியாவத்தை, குரும்பசிட்டி என்.கே. திருமண மண்டபம், ஊரெழு பிள்ளையார், புன்னாலைக்கட்டுவன், சூறாவத்தை, புகையிரத நிலைய வீதி, மணியம் கடையடி, வாகையடி, பிரிட்டிஷ் கவுன்சில், செல்வமஹால் திரு மண மண்டபம், இயற்கை விஞ்ஞான பீடம், விஞ்ஞானபீடம், தியாகி அறக்கொடை நிலையம், றியோ கிறீம் ஹவுஸ், அரசடி பழம்வீதி, கைலாச பிள்ளையார் கோவில், கொக்குவில் சந்தி, நல்லூர் கோயில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, பூநாறிச்சந்தி, ரக்காவீதி, கோயில் வீதி சந்தி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்குச் சந்தி, சிவப்பிரகாசம் வீதி, மருத்துவபீட அரங்கம், பொக்ஸ்ரெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட், மருத்துவபீடம், அச்சுகூடம், ஞானபண்டிதா பாடசாலை, கொக்குவில், மாவடி திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படி, சைலோ கோயில் வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உலகை மாற்றும் ஒற்றைச்சொல்

❖ நீங்கள் எல்லை இல்லாத வலிமை பெற்றவர்கள். உங்களின் உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.

❖ இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். என்னால் இயலாது என்று எதையும் மறுக்காதீர்கள். எதையும் உங்களால் சாதிக்க முடியும்.

❖ பலவீனத்திற்குப் பரிகாரம் வலிமையைக் குறித்து சிந்திப்பதே.

❖ உபநிஷதங்களில் இருந்து கிளம்பி, அறியாமைக் குவியல் மீது குண்டைப் போல வெடிக்கும் சொல் "அஞ்சாமை" என்பது தான். இந்த ஒற்றைச் சொல்லில் தான் வேதத்தின் சாரம் அடங்கியிருக்கிறது. இந்தச்சொல் தான் உலகையே மாற்றி அமைக்கும்.

❖ கடுமையாக உழைக்க முன்வந்தால் குறிக்கோளை எளிதில் அடையலாம்.

❖ மனதில் வலிமை இருந்தால் மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த நிரந்தரமான வாழ்வு கிடைக்கும். பலவீனம் இருந்தால் இடையறாத துன்பமும், சித்திரவதையுமாக வாழ்வு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

45

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்




**தமிழி மற்றும் வட்டெழுத்து கற்றல்**

ஜினவாணி (tamil jinavani.appspot.com) செயலியானது நவீன காலத்து தமிழ் எழுத்துக்களை தமிழ்-பிராமியிலும் வட்டெழுத்திலும் மாற்றும் திறன் கொண்டது. இதைத் தவிர்த்து, இதை தமிழ்-பிராமி மற்றும் வட்டெழுத்து எழுத்துக்களைக் கற்று பயிற்சி செய்யும் கருவியாகவும் பயன்படுத்தலாம். திருக்குறள் மற்றும் தொல்காப்பியத்தையும் கூட இதனூடாக இப்பழைமையான எழுத்துக்களில் கண்டு களிக்கலாம். ஜினவாணி (tamiljinavani.appspot.com) செயலியை பயன்படுத்தி பெறப்பட்ட சில சொற்கள் உரு -1 இல் காட்டப்பட்டுள்ளது.

**மணிப்பிரவாளநடை**

மணிப்பிரவாள நடை என்பது தமிழோடு வடமொழியும் விரவி நடக்கும் தமிழ் உரை நடை. இது தமிழோடு 13 ஆம் நூற்றாண்டில் இணைந்தது. இரத்தினம்-பவளம் என்ற நேரடிப் பொருளுடைய மணிப்பிரவாளம் என்னும் சொல், தென்னிந்தியாவில் வடமொழியும், திராவிட மொழியொன்றும் கலந்து எழுதப்பட்ட ஒரு இலக்கிய நடையைக் குறிக்கும். மணியும், பவளமும் சேர்த்து உருவாக்கப்பட்ட மாலைபோல இரண்டு மொர்ழிகள் கலந்து உருவான இலக்கிய நடை என்பது இதன் பொருளாகும்.

**மணிப்பிரவாள நடை என்பது தமிழோடு வடமொழியும் விரவி நடக்கும் தமிழ் உரை நடையாகும். நாட்டில் இரு மொழியையும் கற்றுத் தேர்ந்த புலவர் பரம்பரையுடன், வடமொழியை மட்டும் கற்ற புலவர்களும் தமிழ் மட்டுமே கற்ற புலவர்களும் வாழ்ந்து வந்தனர். அந்த நிலையில் தமிழறிவு ஒரு புறமும் வடமொழி அறிவு மற்றொரு புறமும் தனித்து இருப்பதை அறிந்த அறிஞர்கள் சிலர் ஒரு புது முயற்சியில் ஈடுபட்டார்கள். சமஸ்கிருத சொற்களையும் தமிழ் சொற்களையும் கலந்த ஒரு மொழி நடையைப் படைத்து மணிப்பிரவாளம் என பெயரிட்டு எழுதத் தொடங்கினார்கள். அதன் வாயிலாக, வடமொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய உறவு ஏற்படும் என்றும் வடமொழிப் புலவர்களும் தமிழ்ப் புலவர்களும் ஒன்றுபட முடியும் எனவும் நம்பினார்கள். ஆனால் அவர்களின் நோக்கம் தோல்வியைக் கண்டது.**




உரு-1 தமிழ் எழுத்தை தமிழி, வட்டெழுத்துக்கு மாற்றல்

**மணிப்பிரவாளத்தின் தோற்றம் குறித்து மு.வரதராசரின் கருத்து.**

நாட்டில் இரு மொழியையும் கற்றுத் தேர்ந்த புலவர் பரம்பரையுடன், வடமொழியை மட்டும் கற்ற புலவர்களும் தமிழ் மட்டுமே கற்ற புலவர்களும் வாழ்ந்து வந்தனர். அந்த நிலையில் தமிழறிவு ஒரு புறமும் வடமொழி அறிவு மற்றொரு புறமும் தனித்து இருப்பதை அறிந்த அறிஞர்கள் சிலர் ஒரு புது முயற்சியில் ஈடுபட்டார்கள். சமஸ்கிருத சொற்களையும் தமிழ் சொற்களையும் கலந்த ஒரு மொழி நடையைப் படைத்து மணிப்பிரவாளம் என பெயரிட்டு எழுதத் தொடங்கினார்கள்.

அதன் வாயிலாக, வடமொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய உறவு ஏற்படும் என்றும் வடமொழிப் புலவர்களும் தமிழ்ப் புலவர்களும் ஒன்றுபட முடியும் எனவும் நம்பினார்கள்.

மணிப் பிரவாளத்தை வளர்த்தவர்களின் நோக்கம் நல்ல நோக்கமே. தமிழ் நாட்டில் வீணான பிளவு வளர்வதை விரும்பாமல் அறிவுலகத்தில் ஒரு நல்ல ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு அது உதவியாகும் என நம்பினர்.

ஆனால், ஒரு நாட்டு மக்களின் வாழ்விலும் சிந்தனையிலும் வழி வழியாக ஊறி, வளர்ந்து விட்ட மொழியின் தன்மையைப் படித்தவர்கள் சிலர் சேர்ந்து முயற்சி செய்து மாற்றிவிட முடியாது என்பதை அவர்கள் உணரவில்லை. நல்ல நோக்கம் கொண்டதே ஆயினும், மொழி இயல்புக்கு மாறானது ஆகையால், அவர்களின் நோக்கம் தோல்வியை கண்டது.

**குயிலெழுத்து**

சங்ககாலக் குயிலெழுத்து நடுகல்லில் (நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல் ஆகும்) செய்தி எழுதப் பயன்படுத்தப்பட்டது. கல்லில் குயின்று எழுதப்பட்ட எழுத்தைக் குயிலெழுத்து என்றனர்.

முன்னர் கூறியதுபோல், கி.பி. மூன்றாம் நூற்றாண்டு அளவில் தமிழி எழுத்து வடிவங்களில் உரு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்றும் அம்மாற்றங்கள் இரண்டு பிரிவுகளைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளன என்றும் கருதப்படுகிறது.

ஒன்று தமிழ் என்று அழைக்கப்படும் எழுத்துகளின் தொடக்கமாக அமைகின்றது. மற்றொன்று வட்டெழுத்து என்று அழைக்கப்படும் எழுத்துகளின் தொடக்கமாக அமைகின்றது. அதாவது தமிழகத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் தமிழ் எழுத்து எழுதப்பெற்று வந்துள்ளது. வேறு சில பகுதிகளில் வட்டெழுத்து எழுதப் பெற்று வந்துள்ளது.

**சங்ககாலக் குயிலெழுத்து நடு கல்லில் செய்தி எழுதப் பயன்படுத்தப்பட்டது. கல்லில் குயின்று எழுதப்பட்ட எழுத்தைக் குயிலெழுத்து என்றனர்.**

**கோலெழுத்து**

கோலெழுத்து என்பது தென் இந்தியாவில் காணப்பட்ட பண்டைய எழுத்து முறையாகும். இது தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் பாவிக்கப்பட்டது.

இது மலையாளத் தில் மிகச் சமீப காலத்திலும் அதாவது கிட்டத்தட்ட கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரையிலும் பயன்பாட்டில் இருந்துள்ளது. தற்போதும் இதன் குறிப்பிடத்தக்க பாவனை அங்குள்ளது.

வட்டெழுத்திலிருந்து கோலெழுத்து உருவாகியது. கிரந்த எழுத்து கலக்காத வட்டெழுத்தின் ஒருவகை தான் கோலெழுத்து. இவற்றுக்கிடையே பாரிய வேறுபாடு இல்லை.

ஆயினும் பிரதேசத்திற்குப் பிரதேசம் இதில் வேறுபாடுகள் காணப்பட்டன. இது வட்டெழுத்துக் குடும்ப எழுத்து முறைக்கு உரியதாகும்.

கோலால் எழுதப்படும் எழுத்து கோலெழுத்து என விளக்கப்படுகிறது. இன்னுமொரு கருத்து, "கோடு எழுத்துக்கள்" கொண்டவை கோலெழுத்து என விளக்குகிறது.

**கோலெழுத்து என்பது தென் இந்தியாவில் காணப்பட்ட பண்டைய எழுத்து முறையாகும். இது தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் பாவிக்கப்பட்டது. கோலால் எழுதப்படும் எழுத்து கோலெழுத்து என விளக்கப்படுகிறது. இன்னுமொரு கருத்து, "கோடு எழுத்துக்கள்" கொண்டவை கோலெழுத்து என விளக்குகிறது.**

**தமிழியிலிருந்து வட்டெழுத்துகளும் தமிழ் எழுத்துகளும் வளர்ந்த வரலாறு.**

இதுவரை தமிழ் வரிவடிவ வளர்ச்சியைத் தமிழி, தமிழ், வட்டெழுத்து ஆகிய எழுத்துகள் வழி அறிந்தோம்.

தமிழ் வரிவடிவம் நூற்றாண்டு தோறும் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அட்டவணை 1 அ மற்றும் 1 ஆ காட்டுகின்றன.

அட்டவணையின் நடுவில் தமிழி எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. இரண்டு பக்கங்களில் வட்டெழுத்துகளும் தமிழ் எழுத்துகளும் நூற்றாண்டு வாரியாக வளர்ந்த முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்காயம்...

கள் அதிகரித்து வருவதை மையமாக வைத்து 2007 ஆம் ஆண்டு 48ஆம் இலக்க விசேட சரக்கு வரிச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த வரிகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## யாழில் 14...

என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சீரற்ற காலநிலையால் 5 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் சேத விபரங்கள் தொடர்பில் குறித்த பிரதேச செயலகத்தினூடாக விபரங்கள் சேகரிக்கப்பட்டு கொழும்பு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (ம-18.33)

## 15 ஆயிரத்தை...

டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,979 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மீண்டும் இந்தியா...

திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பூகோள மாநாட்டிற்காக இந்தியா செல்லும் நிதியமைச்சர் இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீடுகள் குறித்தும் கலந்துரையாடவுள்ளதாக உரிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு-செலவுத் திட்ட விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது டிசம்பர் முதலாம் திகதி பசில் ராஜபக்ஷ இந்தியா சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நாட்டில் உணவுத்...

டத்தில் பெரும்பாலும் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என சிலர் கணிப்புகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும், சிறுபோகத்திற்காக 5 இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிர் செய்கையில் கிடைக்கப்பெற்ற விளைச்சல் 6 மாத காலத்திற்கு போதுமானதாகவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பெரும்போகத்தில் தற்போது 7 இலட்சத்திற்கும் அதிக நிலப்பரப்பில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் விளைச்சல் உரத்தட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டிருப்பினும், நாட்டின் நுகர்வுக்கு போதுமானதாக உள்ளதாக விவசாய பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ம)

## பாரத பிரதம...

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் உள்ளிட்ட சில விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவிடம் கோரும் ஆவணத்தில் கைச்சாத்திடுவது தொடர்பில் கட்சிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று இரவு இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பல கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிடுகையில்,

"எங்களுக்குள் ஒற்றுமையாக பேச்சுவார்த்தை மூலம் முன்னெடுத்த விடயங்களை மேற்கொண்டு செல்வது சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடினோம்.

முடிவில் அடுத்த ஒரு சில தினங்களில் மீண்டும் சந்தித்து தயாரிக்கின்ற ஆவணம் சம்பந்தமாக மீண்டுமொருமுறை முடிவுக்குக் கொண்டுவந்து கைச்சாத்திடுவது குறித்து இன்று (நேற்று) இணக்கப்பாடு கண்டிருக்கிறோம்.

எனவே இது தொடர்பில் சில தினங்களில் நாம் எல்லோரும் ஒரு திருப்திகரமான முடிவை எதிர்பார்க்கலாம்.

சில தரப்புகளுக்கு தமிழ் பேசும் சமூகங்கள் ஒன்றுபடுவது குறித்த விடயத்தில் குழப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு சிலர் வேண்மென்றே இவ்வாறான புரளிகளைக் கிளப்பி விடுகின்றார்கள்.

இதில் எந்த உண்மையும் இல்லை. நாம் எல்லோரும் மிகவும் சிநேகபூர்வமாக இந்த பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறோம் என்றார். (ம)

## சவால்களுக்கு...

நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அரசாங்க கொள்கைகளை செயற்படுத்த உறுதியாக இருப்பதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய அமைச்சின் புதிய செயலாளர் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பசுமை விவசாயம் என்பது அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட ஒரு நல்ல முடிவு. அந்த கொள்கையை அரசாங்கம் [illegible] ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இதன் காரணமாக, எனது அரசியல் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டாலும், நாடு மற்றும் மக்களின் நலனுக்காக இந்தக் கொள்கைகளை தொடர்ந்து செயற்படுத்தும் அரச தலைவருடன் துணை நிற்கிறேன்" என்றார்.(ம)

## மேலும் 50...

அத்துடன் மேலும் 61 குதங்கள், எண்ணெய் களஞ்சியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் லிமிட்டட் மூலம் கூட்டாக நிர்வகிக்கப்படும்.

அந்த நிறுவனத்தின் 51 சதவீத பங்குகளை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனமும், 49 சதவீத பங்குகளை லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் கொண்டிருக்கும்.

இதுதவிர, திருகோணமலை எண்ணெய் களஞ்சியசாலையின் எஞ்சிய 24 குதங்களுக்கான பங்குகளை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் கொண்டிருக்கும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (ம)

## மக்கள் பட்டினி...

தன் பின்னர் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் பட்டினி கிடக்காமல் இருப்பதற்கான பொறுப்பை அமைச்சர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதால், இந்த நாட்டில் உள்ள மக்களை பட்டினி கிடக்க அரசாங்கம்ஒருபோதும் இடமளிக்காது என அவர் தெரிவித்துள்ளார். (ம)

## மது...

அதிரடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் இரவு மதுபோதையில் கடமையில் இருந்துள்ளார்.

இது தொடர்பாக காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை நேற்று பணி இடை நீக்கம் செய்தார். (ம-33,104)

# அராலியில் விபத்து; இருவர் படுகாயம்

(அராலி)

வட்டுக்கோட்டை - அராலி பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அராலி தோப்பச்சி வாசிகசாலைக்கு அருகே சென்றுகொண்டிருந்த பாண் விற்பனை செய்யும் முச்சக்கரவண்டியும் சைக்கிளும் விபத்துக்குள்ளானது.

இதில் முச்சக்கரவண்டியின் சாரதியும் சைக்கிளில் பயணித்த நபரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம- 104)

## எரிவாயு கசிவால்...

சாந்தி மாவத்தையில் உள்ள வீடொன்றில் எரிவாயு கசிவு காரணமாக தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்த தீ பரவலால் எந்தவொரு உயிர் சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)


மெகா பவர்
திகதி 31/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0981
Z 13 12 16 23 47

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/12/31 1653 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 07 வெற்றி இலக்கங்கள் 08 12 49 58

மஹஜன சம்பத
திகதி 2021/12/31
சீட்டிழுப்பு இலக்கம் 4633
H 4 0 0 7 6 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 31.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2928
P 19 39 44 67

தன நிதானய
திகதி - 2021.12.31
சீட்டிழுப்பு இலக்கம் - 663
G 11 44 64 73

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1610 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 31.12.2021 தினம் வெள்ளி
Q 04 29 45 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 52,272,228/=

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 115
சீட்டிழுப்பு திகதி 31.12.2021 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 29 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,227,800/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.31
சீட்டிழுப்பு இல: 3771
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,160,040/-
வெற்றி இலக்கங்கள் 02 15 35 61 Y

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,841,507/=
திகதி 31.12.2021
வெற்றி வாரம் 3322
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 33 36 56 59
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,805,160/=

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 40 05 19 47 52
சீட்டிழுப்பு வாரம் 786
2021.12.31 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 200,417,035/-

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1438
சீட்டிழுப்பு திகதி: 2021.12.31
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,560,420/-
வெற்றி இலக்கங்கள் 30 36 49 52 M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VACANCY**

SB Travels & Tours (Pvt) Ltd.

எமது யாழ். கிளைக்கு Air Ticketing இல் ஆர்வமுள்ளவர்கள் தேவை. (9266)

M. 077 108 3481

T. 011 254 0280

Email : sbtravels99@yahoo.com

**NEW SCIENCE HALL**

A/L PHYSICS ENGLISH MEDIUM

STARTS ON 01.01.2022

2022 Batch 2.7 HYDRO STATICS, 2.8 HYDRO DYNAMIC – 8AM - 9.30AM

2021 Batch Unit 10; PROPERTIES OF MATTER - 9.30 AM - 11AM

(C-3388)

M.Kuganeswaran B.sc(Hons)

**Physics**

T.K.Kajan B.sc (8931)

☎-077 653 1177

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3381)

0768226240 DHL

**வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்**

கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER ( முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும்

ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள் (C-3382)

IELTS Life Skills B1

வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

0777-068-777 R1

**SB Travels & Tours Pvt Ltd**

IAIA - நேரடி முகவர்

அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, லண்டன், சுவிற்சர்லாந்து, இந்தியா, கத்தார், சிங்கப்பூர் போன்ற சகல நாடுகளிற்கான விமான பயணச் சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பு - திருச்சி Return ticket - 32,900/= (9273)

No.98, Kasthuriyar Road, Jaffna.

T.P : 021 222 8555

M. 076 691 1082 / 077 108 3481

அருள்வளர்

**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**

இணுவில் மருதனார்மடம், சுன்னாகம்.

**இலட்சார்ச்சனைப் பெருவிழா**

**தேர்த்திருவிழா – 01.01.2022**



( மூலஸ்தானத்தில் உள்ள மூர்த்தி )

வற்றாத செல்வமும் வளம்மிகு சோலைகளும் வானுயர்ந்த மலைகளும் பாய்ந்தோடும் நதிகளும் பக்தி நெறி வழுவாம்களும் நிறைந்த ஞான சிவபூமியான ஈழமணித் திருநாட்டில் சிரசுபோல விளங்குகின்ற யாழ்ப்பாணத்தில் கமலத்தில் திழைத்து கருணைக் கடலில் மூழ்கி பக்தியில் தேறிய பக்திமான்கள் கூடி வாழும் புண்ணியபதியான இணுவையம்பதியின் அடையாளமாக திகழும் மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயப் பெருமான் மந்திர ஒலியும் மணிநாதமும் பஜனை இசையும் காற்றில் கலந்துவர தேரேறி வருகின்ற காட்சி அற்புதக் காட்சி.

அனுசரணை

**இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை**

**INUVAIYUR MURUGAJEEVA FOUNDATION**

இணுவில் மேற்கு, இணுவில்.

(C-3390)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.